# ‘நமக்கென்றொரு பெட்டகம்’
## நூல் அறிமுகமும்

### ‘கிராமிய நூலகங்களும் அவற்றின் சமகாலத் தேவைகளும்’
### உரையாடலும்




விதை குழுமம்

‘நமக்கென்றொரு பெட்டகம்’

நூல் அறிமுகமும்

‘கிராமிய நூலகங்களும் அவற்றின் சமகாலத் தேவைகளும்’

உரையாடலும்

# ‘நமக்கென்றொரு பெட்டகம்’

## நூல் அறிமுகமும்

### ‘கிராமிய நூலகங்களும் அவற்றின் சமகாலத் தேவைகளும்’

### உரையாடலும்

தொகுப்பு:

விதை குழுமம்

வெளியீடு:

விதை குழுமம்

2022

**நூலியல் தகவல்கள்**

| | | |
|---|---|---|
| நூலின் தலைப்பு | : | "நமக்கென்றொரு பெட்டகம்" நூல்அறிமுகமும், கிராமிய நூலகங்களும் அவற்றின் சமகாலத் தேவைகளும் - உரையாடலும் |
| தொகுப்பாசிரியர் | : | விதை குழுமம் |
| பதிப்பு விபரம் | : | முதற் பதிப்பு, ஜனவரி 2022. |
| வெளியீடு | : | விதை குழுமம்,<br>மெய்கண்டான் ஒழுங்கை, சரசாலை தெற்கு,<br>சாவகச்சேரி, யாழ்ப்பாணம். |
| அச்சு | : | குமரன் அச்சகம்,<br>இல. 39, 36ஆவது ஒழுங்கை, கொழும்பு 6. |
| பக்கங்கள் | : | 59 |




## அறிமுகமும் உரையாடலும்

நிகழ்வு 03

# நமக்கென்றொரு பெட்டகம்

என். செல்வராஜா




**காலம் - ஞாயிற்றுக்கிழமை, செப்டெம்பர் 12, 2021**
**நேரம் - இலங்கை நேரம் இரவு 07:30 மணி**
**ரொரன்ரோ நேரம் காலை 10:00**
**இங்கிலாந்து நேரம் பிப 3:00**

## ஆரம்பப் பகிர்வுகள்

கலாநிதி திருமதி.கல்பனா சந்திரசேகர்
பதில் நூலகர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

அருண்மொழிவர்மன்
செயற்பாட்டாளர்
விதை குழுமம்

## உரையும் உரையாடலும்

**கிராமிய நூலகங்களும் அவற்றின் சமகாலத் தேவைகளும்**
என். செல்வராஜா
நூலியலாளர்

ஒருங்கிணைப்பு

கிரிசாந்
செயற்பாட்டாளர்
விதை குழுமம்

zoom
Meeting ID: 854 3273 2925

**விதை குழுமம்**

*நூலகங்கள் என்பவை வெறும் கட்டடங்களும் புத்தகங்களும் அல்ல, அவை சமூகத்தின் உயிர்ப்பான ஓர் அங்கமாகவும் சமூக முன்னேற்றத்திற்கான கருவிகளில் ஒன்றாகவும் இருப்பன என்கிற புரிதலை அறிவுறுத்திவரும் மிகச்சிலரில் நூலியலாளர் என். செல்வராஜா முக்கியமான ஒருவர். கிராமிய நூலகங்கள் குறித்தும் சிறுவர் நூலகங்களின் உருவாக்கம் குறித்தும், பட்டியலாக்கம், ஆவணமாக்கல் செயற்பாடுகள், நூலகர்களுக்கான வழிகாட்டல்கள் என்பவை சார்ந்ததுமாக அவரது செயற்பாடுகள் நாற்பதாண்டுகளுக்கு மேலாகத் தொடர்பவை. ஈழத்து நூல்களின் விபரப்பட்டியலான நூல் தேட்டத்தின் 15வது தொகுதி இவ்வாண்டின் ஆரம்பப்பகுதியில் வெளிவந்திருக்கின்றது.*

*"எங்கட புத்தகங்கள்" வெளியீடாக இவ்வாண்டு வெளிவந்த நூலியலாளர் என். செல்வராஜா அவர்களது "நமக்கென்றொரு பெட்டகம்" என்கிற நூலின் அறிமுகத்துடன் அதன் தொடர்ச்சியாக கிராமிய நூலகங்களின் தேவைகள் குறித்ததும் சமூக அபிவிருத்தியில் அவற்றின் வகிபாகம் குறித்ததுமாக விதை குழுமம் ஒருங்கிணைக்கும் "அறிமுகமும் உரையாடலும்" தொடரின் மூன்றாவது நிகழ்வு நடைபெற இருக்கின்றது.*

**ஆரம்பப் பகிர்வுகள்:**

**'நமக்கென்றொரு பெட்டகம் - தமிழ்த் தேசிய நூலகச் சிந்தனைகள்'**

**கலாநிதி. திருமதி. கல்பனா சந்திரசேகர்**

(பதில் நூலகர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

**அருண்மொழிவர்மன்**

(செயற்பாட்டாளர், விதை குழுமம்)

உரையும் உரையாடலும்:

**'கிராமிய நூலகங்களும் அவற்றின் சமகாலத் தேவைகளும்'**

**திரு.என். செல்வராஜா**

(நூலியலாளர்)

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு:

**கிரிசாந்**

(செயற்பாட்டாளர், விதை குழுமம்)

**காலம்: ஞாயிற்றுக்கிழமை, செப்ரம்பர் 12, 2021**

**நேரம்: இலங்கை நேரம் இரவு 7 மணி**

**ரொரன்றோ நேரம் காலை 10 மணி**

**இங்கிலாந்து நேரம் பிற்பகல் 3 மணி**

# ‘நமக்கென்றொரு பெட்டகம்’
## நூலுக்கான அறிமுகவுரைகள்

### உரை 01

*கலாநிதி. திருமதி. கல்பனா சந்திரசேகர்*
பதில் நூலகர்
யாழ் பல்கலைக்கழகம்

*இந்நிகழ்வை நடாத்திக் கொண்டிருக்கும் விதை குழுமம் அமைப்பினருக்கும், "நமக்கென்றொரு பெட்டகம்" நூலின் ஆசிரியர் நூலியலாளர் திரு.என். செல்வராஜா அவர்களுக்கும், zoom செயலியூடாக இணைந்து கொண்டிருக்கும் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கங்கள்.*

*நூலியலாளர் என். செல்வராஜா அவர்களின் 57வது நூலாக வெளிவரும் "நமக்கென்றொரு பெட்டகம் - தமிழ்த் தேசிய நூலகச் சிந்தனைகள்" எனும் இந்நூலுக்கான அறிமுகவுரையை நிகழ்த்துவதற்கான சந்தர்ப்பத்தை அளித்தமைக்கு விதை குழுமம் அமைப்பினருக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.*

*நூலகவியல் துறையில் பயின்று ஒரு நூலகராக தமது பணியை 1978இல் ஆரம்பித்த நூலாசிரியர் நூலக நடவடிக்கைகளுக்கு அப்பால் ஓர் எழுத்தாளராக, வெளியீட்டாளராக, ஆவணக் காப்பாளராக, நூலியலாளராக, வாசகராக, விமர்சகராக பல பரிமாணங்களில் 40 வருடங்களுக்கு மேலாக அர்ப்பணிப்போடு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். உலகத் தமிழர்களிடையே பிரபல்யமான ஈழத்தமிழ் நூலக வியலாளரான திரு.என். செல்வராஜா அவர்களைப் பற்றி நான் கூறி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. "நூல்தேட்டம்" இவரது அடையாளம். தனிமனித முயற்சியாக இற்றைவரை 16 தொகுதிகளில் 16,000 ஈழத்தமிழ் நூல்களை தேடிப் பதிவு செய்து ஆவணப்படுத்தியுள்ளார். 17ஆவது தொகுதிக்கான தேடலில் தேனீயாகச் செயற்பட்டு வருகிறார். இலங்கையில் பணியாற்றிய காலப்பகுதியிலும், பின்னர் பிரித்தானியாவில் வாழ்கின்ற இக்காலப்பகுதியிலும் ஆவணவாக்கல் செயற்பாடுகளில் இவரது பங்களிப்பு அளப்பரியது.*

இனி, இன்று அறிமுகம் செய்யப்படும் "**நமக்கென்றொரு பெட்டகம் - தமிழ்த் தேசிய நூலகச் சிந்தனைகள்**" எனும் நூலிலுள்ள விடயங்கள் தொடர்பில் பார்ப்போம். இந்நூலில் 15 கட்டுரைகள் உள்ளன. பெரும்பாலான கட்டுரைகள் தமிழ்த் தேசிய நூலகமொன்றின் உருவாக்கம் பற்றியே பேசுகின்றன. சில கட்டுரைகள் தீவக வரலாற்றைக் கூறுகின்றன. தமிழ்ச் சமூகத்தின் முதுசொம்களைப் பேணிப் பாதுகாத்த ஆவணஞானி குரும்பசிட்டி இரா.கனகரத்தினம் அவர்களின் சமூகத்தொண்டு பற்றி ஒரு பதிவு உள்ளது. அழிக்கப்பட்ட நூலகங்கள் தொடர்பிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. இனி மிகச் சுருக்கமாக இக்கட்டுரைகள் ஒவ்வொன்றைப் பற்றியும் பார்ப்போம்.

முதலாவது கட்டுரையாக "வடகிழக்கில் பிராந்திய நூலகச் சிந்தனைகள்" அமைந்துள்ளது. இலங்கையிலுள்ள பல்வேறு வகையான நூலகங்கள் பற்றியும், அவை எந்தெந்த நிறுவனங்களால் நிர்வகிக்கப் படுகின்றன என்பது தொடர்பிலும், இலங்கைத் தேசிய நூலகத்தில் தமிழ் மொழிக்கு வழங்கப்பட்டுவரும் "முக்கியத்துவம்" தொடர்பிலும், தமிழர் தாயகப் பகுதிக்கு ஏன் ஒரு பிராந்திய நூலகம் தேவை என்பது பற்றியும் மிக விரிவாக ஆராயப்பட்டுள்ளது. இக்கட்டுரையை வாசிப்பவர்கள் கட்டுரை ஆசிரியரின் கருத்துக்கு இணங்கிச் செல்லக்கூடிய வகையில் புள்ளிவிபரத் தரவுகள் ஆதாரமாக வழங்கப்பட்டுள்ளன. எமது பிராந்தியத்திற்கு ஒரு தமிழ்த் தேசிய நூலகம் தேவை என்ற தமது கருத்தோடு வாசகர்களை இணங்கிப்போக வைத்துள்ளார்.

"இலங்கை தேசிய நூலகத்தின் தமிழ் சார்ந்த வெளியீடுகள்: தேசிய எழுத்தாளர் பட்டியல்" எனும் இரண்டாவது கட்டுரையில் தேசிய நூ லகத்தால் வெளியிடப்பட்ட முக்கிய நூலில் எழுத்தாளர் பற்றிய விபரங்கள் முழுமை பெறவில்லை என்பதனை சுட்டிக்காட்டுகின்றார். சர்வதேச தராதர நூல் எண்ணை (ISBN) மாத்திரமே பயன்படுத்தி இந்நூலுக்கான தரவுகள் திரட்டப்பட்டுள்ளமையால் ISBN இலக்கத்தினைப் பெற அக்கறை காட்டாத ஈழத்து தமிழ் படைப் பாளிகளின் விபரங்கள் இதில் இடம்பெறவில்லை எனும் தகவலும் சொல்லப்படுகிறது. அத்தோடு எழுத்தாளர்கள் தொடர்பில் வெளியீடுகளை மேற்கொண்ட திரு. பீ.எம்.புன்னியாமீன், திரு. முல்லைஅமுதன் போன்றவர்கள் மற்றும் கொழும்புத் தமிழ்ச் சங்கம் போன்றவற்றால் கூட தொடர்ச்சியாக அப்பணியை மேற்கொள்ள முடியவில்லை என கட்டுரையாளர் ஆதங்கப்படுகிறார்.

"மீண்டும் ஒரு தடவை கடந்து போயிற்று" - இது இந்நூலின் மூன்றாவது கட்டுரை. யாழ்ப்பாணப் பொது நூலகம் எரியூட்டப்பட்டதன் நினைவாக எழுதப்பட்ட கட்டுரை. இதில் ஆவணக்காப்பகம் தொடர்பில் குறிப்பிடப்படுகிறது. நூலகம் வேறு ஆவணக்காப்பகம் வேறு என்பது கட்டுரையாசிரியரின் நிலைப்பாடு. எமது மக்களால் வெளியிடப்படும் வெளியீடுகளின் ஒரு பிரதியையாவது பேணிப் பாதுகாக்க வேண்டியது தேசிய ஆவணக்காப்பகத்தின் தலையாய கடமையென குறிப்பிடுகின்றார். மறைக்கப்பட்டு வரும் எமது வரலாற்றைப் பேணவும், அழிக்கப்பட்டு வரும் பண்பாட்டு விழுமியங்களைப் பேணவும், படுகொலை செய்யப்பட்டு வரும் எமது கலாச்சாரத்தைப் பேணவும் எமக்குத் தேவைப்படுவது சுதந்திரமானதொரு ஆவணக்காப்பகமே என்பதை அவரது கருத்தாக பதிவு செய்துள்ளார். எமக்கான ஆவணக்காப்பகம் ஒன்றின் தேவையை நியாயபூர்வமாக ஏற்றுக்கொள்ள வைக்கிறது இக்கட்டுரை.

"வளரும்போதே அறிவையும் கொஞ்சம் தேடுவோம், வாருங்கள்" என்பது நான்காவது கட்டுரை. பாடசாலை மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பது தொடர்பாக இதில் மிக அழகாக கூறுகிறார். பாடசாலைக் கல்வி மட்டும் ஒருவனை உலக ஞானம் தெரிந்தவனாக ஆக்கிவிடாது என்பதனையும், பரந்துபட்ட வாசிப்பு பழக்கத்தை உடையவனே பல்துறை சார்ந்த அறிவை பெற்றுக் கொள்கிறான் என்பதனையும் கூறி, வடமாகாண சர்வோதய ஸ்தாபகர் அமரர் திரு.க.திருநாவுக்கரசு அவர்கள் இளவயதில் வாசிப்பினால் பெற்ற உயர்ச்சியையும் இதில் சுட்டிக்காட்டியுள்ளார். மாணவர்களை வாசிப்பின்பால் ஈர்ப்பதற்கு உகந்ததொரு கட்டுரையாக இது விளங்குகிறது.

ஐந்தாவது கட்டுரையாக இடம்பெற்றுள்ள "தடைசெய்யப்பட்ட நூல்களால் ஆனதொரு நினைவாலயம்" என்னும் கட்டுரையில் ஒரு சமூகம் தனது வரலாற்று ஆவணங்களை எவ்வாறு பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஜேர்மனியில் நடைபெற்ற நிகழ்வுகள், ஆர்ஜென்ரீனாவில் இடம்பெற்றவை தொடர்பில் குறிப்பிடப்படுகின்றது. இவற்றை உதாரணமாகக் கொண்டு தமிழ்ப் பிரதேச நூலகங்கள் தமது கையிருப்புக்களை எவ்வாறு பேணிப் பாதுகாக்கவேண்டும் என விரிவாகச் சொல்லியுள்ளார். நூலகர்களுக்கு பயனுள்ள ஒரு கட்டுரை இது.

"ஈழத்து தமிழ் நூலியல் உலகில் சிறப்புமலர்கள், ஆண்டு மலர்களுக்கான வழிகாட்டிகள் மற்றும் சுட்டிகளின் பயன்பாடு" என்கின்ற ஆறாவது கட்டுரையில் சிறப்பு மலர்களில் வெளிவரும் கட்டுரைகளை சுட்டியாக்கம் செய்து வழிகாட்டிகள் தயாரிக்கப்பட்டால் அது வாசகர்களுக்கு இலகுவாக தேடலை மேற்கொள்ள உதவியாக இருக்கும் என்கின்ற சிந்தனையில் தாம் உருவாக்கிய சிறப்புமலர் களுக்கான வழிகாட்டிகள் தொடர்பில் கூறியுள்ளார்.

ஏழாவதாக இடம்பெற்றிருக்கும் "யாழ்ப்பாணத்தில் இந்தியப் புத்தகக் கண்காட்சியும் ஈழத்துத் தமிழ் பதிப்புக்களும்" என்கின்ற கட்டுரையில் ஈழத்துப் பதிப்புக்களிலும் பார்க்க இந்தியப் பதிப்புக்களில் நாம் அதிகம் அக்கறை கொண்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார். தமிழ் பதிப்புலகத்தவர்கள் ஒற்றுமையோடு இயங்கும் பட்சத்தில் ஈழத்துப் பதிப்புலகமும் புத்துணர்ச்சி பெறும் - பெறவேண்டும் என்கின்ற தனது ஆதங்கத்தினை இக்கட்டுரையில் பதிவு செய்கின்றார். இலங்கைத் தமிழ் பதிப்புத்துறை தென்னிந்திய தமிழ்ப் பதிப்புத்துறையுடன் போட்டிபோட வேண்டியுள்ள நிலைமையையும், சிங்கள பதிப்புத்துறைக்கு அவ்வாறானதொரு நிலைமை இல்லாமையினாலேயே அவர்கள் வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்கின்ற விடயங்கள் விபரமாக சொல்லப்பட்டுள்ளது.

எட்டாவதாக "ஒரு இலண்டன் கடிதம்" என்ற தலைப்பிலான கட்டுரை புலம்பெயர் தேசத்திலுள்ள தமிழ் மக்கள் தமது அடுத்த தலைமுறையினருக்கு எமது பூர்வீகம் பற்றி அறிந்து கொள்வதற்கு தமிழ் வாசிப்பை ஊக்கப்படுத்த வேண்டுமென்பதனையும், சிறிய வாசகர் வட்டங்களை உருவாக்கி தாம் படித்தவற்றை பகிர்ந்துகொள்ளும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும் என்பது பற்றியும் கூறியுள்ளார். புலம்பெயர்ந்து வாழும் எம்மக்கள் எமது அடுத்த தலைமுறையினருக்கு தமிழ் மொழியை சரிவரக் கற்றுக் கொடுக்கவில்லை என்பதோடு தமிழ் தெரியாத தமிழர் பரம்பரை உருவாகிக் கொண்டிருப்பதாகவும் வேதனையோடு குறிப்பிடுகின்றார்.

"ஆவண ஞானி குரும்பசிட்டி இரா.கனகரத்தினம்" அவர்களைப் பற்றிய விபரங்கள் அடங்கியதாக ஒன்பதாவது கட்டுரை அமைந்துள்ளது. ஈழத்தமிழர்களின் வரலாற்றுத் தரவுகளை 45 வருடங்களாகப் பேணிப் பாதுகாத்த ஒரு பெருந்தகை அவர். அதற்காக எவ்வளவு சிரமங்களையும் சவால்களையும் எதிர்கொண்டார் என்பது பற்றி இதில் விளக்கியுள்ளார். தமிழருக்கு என்றொரு தேசிய ஆவணக் காப்பகம் உருவாக

வேண்டுமென்ற தூரநோக்கு சிந்தனையுடன் செயற்பட்டவர் ஆவணஞானி. அவரைப் பற்றிய பதிவு முக்கியமானதே.

"பிரதேச வரலாற்று மூலங்களில் தீவகம் ஓர் அறிமுகம்" என்கின்ற பத்தாவது கட்டுரையில் தீவகத்தைப் பற்றிய வரலாறுகளைக் குறிப்பிடும் நூல்கள் பல குறிப்பிடப்பட்டு அதனை எழுதியவர்களின் தரவுகளும், அந்நூல்களில் தீவகம் தொடர்பில் குறிப்பிடப்படும் விடயங்களும் சுருக்கமாக தரப்பட்டுள்ளது. தீவகத்தின் சிறப்புக்களையும் அங்கு உருவாகிய கல்விமான்களின் விபரங்கள் தொடர்பிலும் அறிய விரும்புபவர்களுக்கு இக்கட்டுரை ஒரு பரந்த அறிமுகத்தை வழங்குகிறது.

பதினோராவது கட்டுரையாக "புங்குடுதீவு பிரதேச வரலாறு கூறும் சில நூல்கள்" எனும் கட்டுரை காணப்படுகிறது. புங்குடுதீவு பிரதேசத்தைப் பற்றிய வரலாற்று ஆய்வுகளை மேற்கொள்ள விரும்பும் ஆய்வாளர்களுக்கு உதவியாக இதுவரை வெளிவந்த சில பிரசுரங்கள் பற்றிய தகவல்களை இக்கட்டுரையில் பதிவு செய்வதாக கட்டுரையாளர் தெரிவித்துள்ளார். புங்குடுதீவு பற்றிய பல பயன்தரு விடயங்களை உள்ளடக்கியதாக இக்கட்டுரை காணப்படுகிறது.

பன்னிரண்டாவது கட்டுரையாக "தமிழாராய்ச்சி மாநாடுகளும் தமிழின் பெருமை பேசும் மாநாடுகளும் - காலத்தின் தேவை என்ன?" எனும் கட்டுரை இடம்பெற்றுள்ளது. முதலாவது தமிழாராய்ச்சி மாநாட்டிலிருந்து 2010இல் நடைபெற்ற செம்மொழி மாநாடு வரை குறிப்பிடப்படுவதோடு, தனிநாயகம் அடிகளாரின் தூய சிந்தனை தொடர்ந்தும் சிந்திக்கப்படுகின்றதா என்பதனை சந்தேகத்துடன் வினவுகின்றார். புலம்பெயர் தேசத்து தமிழ்க் குழந்தைகளுக்கு எமது வரலாறு தெரியப்படுத்தப்படுவதற்கு நாம் என்ன செய்தோம் என மீண்டும் இங்கு வினா எழுப்புகின்றார். இலண்டனில் இயங்கும் தமிழ்சார் நிறுவனங்கள், சைவக் கோயில்கள் சரியான முறையில் எமது புலம்பெயர் இளைய தலைமுறையினரை வழிப்படுத்தவில்லை என்பதனையும் சுட்டிக்காட்டுகின்றார்.

"மோகனாங்கி: வெளிச்சத்துக்கு வந்துள்ள ஈழத்தவர் படைப்பிலக்கியம் ஒன்று" எனும் தலைப்பிலான பதின்மூன்றாவது கட்டுரையானது 1895இல் திருகோணமலையைச் சேர்ந்த த.சரவணமுத்துப்பிள்ளை எழுதிய "மோகனாங்கி" எனும் நூல் பற்றிக் கூறுகின்றது. G.U.போப் அவர்களின் 1909ம் ஆண்டு பிரித்தானிய நூலக நூற்பட்டியல் ஒன்றில் மோகனாங்கி நூல் பற்றிய விபரம் காணப்பட்டதைத் தொடர்ந்து

திரு.சத்தியதேவன், திரு.க.சரவணபவன் ஆகியோரின் முயற்சியில் பிரித்தானியாவிலிருந்து பிரதி எடுக்கப்பட்டு, பின் தட்டச்சு செய்யப்பட்டு வெளியிடப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

புதினான்காவது கட்டுரையாக "திபெத்தின் மடாலயச் சுவர்களின் பின்னால் கரந்துறைந்த மாபெரும் பண்டைய நூலகம்" இடம் பெற்றுள்ளது. உலகிலும் நமது நாட்டிலும் எரியூட்டப்பட்ட அல்லது அழிக்கப்பட்ட நூலகங்கள் தொடர்பில் குறிப்பிட்டுள்ள இக்கட்டுரை திபெத்தில் அமைந்துள்ள, பத்தாயிரம் ஆண்டுகால தென்னாசிய வரலாற்றை தன்னகத்தே கொண்டமைந்த மடாலய நூலகமொன்றின் விபரத்தை தருகின்றது. வியத்தகு பல விடயங்கள் இக்கட்டுரையில் இடம்பெற்றுள்ளன.

இறுதியாக இடம்பெற்றுள்ள ஆங்கிலக் கட்டுரையான "Revitalizing National Library services through Regional Library and Documentation Centres (RLDCs) – Sri Lankan perspective" ஆனது 2018ஆம் ஆண்டில் இலங்கை தேசிய நூலக ஆவணவாக்கல் சபையினால் நடாத்தப்பட்ட ஆய்வு மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டதாகும். இக்கட்டுரையில் தமிழர் பகுதிகளுக்கான இலங்கை தேசிய நூலகத்தின் சேவைகள் தொடர்பிலான குறைபாடுகள் சம்பந்தமாக குறிப்பிடப்படுவதுடன், வடமாகாணத் துக்கான பிராந்திய தேசிய நூலகமொன்றிற்கான முன்மொழிவும் இடம்பெற்றுள்ளது.

இத்தொகுப்பிலுள்ள அனைத்துக் கட்டுரைகளும் ஈழத்தமிழருக்கான ஆவணக்காப்பகமொன்றின் தேவையையே வலியுறுத்தி நிற்கின்றன. இது தொடர்பான முயற்சிகளை முன்னெடுப்பதில் ஆர்வமுள்ள வர்களுக்கும், இணைந்து பணியாற்ற விரும்புபவர்களுக்கும் இந்நூல் ஒரு வரப்பிரசாதமாகும்.

"முயற்சி திருவினையாக்கும்" எனும் மேற்கோளுக்கிணங்க நாம் எல்லோரும் இணைந்து பயணித்தால் நூலகவியலாளர் என்.செல்வராஜா அவர்களின் இந்நூலுக்கான இலக்கை அடைய முடியுமெனக் கூறிக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகின்றேன்.

வணக்கம்.

## உரை 02

*அருண்மொழிவர்மன்*
எழுத்தாளர்,
ஆசிரியர் குழு-புதிய சொல்,
செயற்பாட்டாளர்-விதை குழுமம்.

*நன்றி கிரிசாந், நன்றி கலாநிதி திருமதி கல்பனா சந்திரசேகர். உங்களுடைய உரை இந்தப் புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு கட்டுரையும் மிக விரிவாக அலசி ஆராய்வதாக இருந்தது. அந்த அடிப்படையில் நீங்கள் கிட்டத்தட்ட என்னுடைய வேலையில் ஒரு அரைவாசி வேலையைக் குறைத்துவிட்டீர்கள். அதற்கும் என்னுடைய பிரத்தியேகமான நன்றிகள். திரு.செல்வராஜா அவர்கள் - பெரும்பாலான வர்களுக்கு அறிமுகமானது போல - எனக்கும் "நூல் தேட்டம் செல்வராஜா" என்றே அறிமுகமானவர். புலம்பெயர்ந்து கனடாவிற்கு வந்து நான் புத்தக வாசிப்பிற்கு மீண்டும் திரும்பிக்கொண்டிருந்த காலப்பகுதியில் இலங்கையில் இருந்து வெளிவந்து கொண்டிருக்கும் புத்தகங்களைப் பற்றி அறிந்துகொள்வது என்பதே மிகவும் கடினமான ஒன்றாக இருந்தது. இப்பொழுது ரொரன்றோவில் தமிழ்ப் புத்தகக் கடையென்று ஒன்றுதான் இருக்கின்றது. ஆனால் அந்தக் காலப்பகுதியில் 5 புத்தகக் கடைகள் இருந்தன. இவற்றைத் தவிர தனிப்பட்ட முயற்சிகளால் புத்தகங்களை எடுப்பித்து விற்பவர்களும் இருந்தனர். ஆனால், அப்படி இருந்தபோதும் இலங்கையில் இருந்து வெளிவருகின்ற புத்தகங்களைப் பெற்றுக்கொள்வது என்பது கடினமான ஒன்றாகவே இருந்தது. நான் கனடாவிற்குப் புலம்பெயர்ந்து பன்னிரண்டு வருடங்களின் பின்னர் முதல்முறையாக இலங்கைக்குப் போன போதுதான் அங்கே எத்தனை புத்தகங்கள் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கின்றன என்பதைப் பார்க்க முடிந்தது. அப்படி இருக்கின்றபோது இலங்கையில் இருந்து வெளிவந்த, வெளிவருகின்ற புத்தகங்களைப் பற்றிய அறிமுகத்தை பதிவாகவும் சாட்சியாகவும் வெளிப்படுத்திக் கொண்டிருந்தவை பெரியளவிலான நூல் தொகுதிகளாக வெளிவந்துகொண்டிருந்த நூல் தேட்டம் தொகுப்புகள். பின்னர் வலைப்பதிவுக் காலங்களில் வலைப்பதிவுகளூடாகவும் குழுமங்*

களூடாகவும் பல அறிமுகங்களும் உரையாடல்களும் நிகழ்ந்தன என்றாலும் முறையான பதிவுகளைச் செய்தது நூல்தேட்டமே!

நூல்தேட்டம் போன்ற வேலைத்திட்டங்கள் அமைப்புரீதியாக/ நிறுவனரீதியாக செய்யப்படவேண்டிய பெரிய வேலைத்திட்டங்கள். அப்படியான வேலைத் திட்டங்களை தனி நபர்கள் செய்வதை நான் பொதுவாக ஆரோக்கியமான ஒன்றாகப் பார்ப்பதில்லை. ஆனால் நூல்தேட்டம் என்பது என்.செல்வராஜா என்கிற தனிஒருவரால் முன்னெடுக்கப்பட்ட மிகப் பிரமாண்டமான வேலைத்திட்டம். இங்கே நான் பிரமாண்டம் என்ற சொல்லை மிகவும் பிரக்ஞை பூர்வமாகவே சொல்கின்றேன், ஏனென்றால் பிரமாண்டத்தை பிரமாண்டம் என்றுதான் சொல்லமுடியும். அதன் 15 தொகுதிகளில் கிட்டத்தட்ட 15000 ஈழத்து நூல்கள் பட்டியலாக்கம் செய்யப்பட்டிருப்பதுடன் அவை குறித்த சுருக்கமான அறிமுகங்களும் உள்ளடக்கப் பட்டிருக்கின்றன. நூல் தேட்டம் தொகுதிகளை எனது வீட்டு நூலகத்தில் சேர்க்க வேண்டும் என்கிற ஆர்வத்தில் ஒருமுறை செல்வராஜா அவர்களைத் தொடர்பு கொண்டு நூல்தேட்டம் தொகுதிகளை எப்படி கனடாவுக்குப் பெற்றுக்கொள்வது என்று கேட்டிருந்தேன். அதற்கு அவர் சொன்னார் "ராசா, அதை நீங்கள் கனடாவுக்கு எடுக்கிறதென்றால் கனகாசு முடியும், நான் எல்லாத் தொகுதிகளையும் ஒன்லைனில் கொடுத்திருக்கிறேன் தானே, நீங்கள் அங்கேயே பார்த்துக்கொள்ளுங்கோ" என்று. இதை ஒரு முக்கியமான பண்பாக நான் பார்க்கின்றேன். புலமைச் சொத்து அனைவரிடமும், குறிப்பாக அந்தத் துறைகள் குறித்துச் செயற்படுபவர்களிடம் போய்ச் சேரவேண்டும் என்கிற அக்கறையாகவே அவர் எனக்குச் சொன்ன பதிலினை நான் பார்க்கின்றேன். அத்துடன், அந்தத் தொகுதிகளை வாங்க விரும்புவோருக்கு இருக்கக் கூடிய பொருளாதாரச் சுமைகள், வசதியீனங்கள் பற்றியும் அக்கறை கொண்டதோர் பண்பாக அதனை நான் விதக்கின்றேன்.

நூல்தேட்டம் செல்வராஜா என்று அறியப்பட்டு வந்த திரு.என். செல்வராஜா அவர்களைச் சுட்டுவதற்கான மிகப் பொருத்தமான சொல்லாக நூலியலாளர் என்பதையும் நூலியலாளர் என்ற சொல்லால் சுட்டப்படக்கூடிய பொருத்தமானவராக திரு.என்.செல்வராஜா அவர்களையும் நான் இங்கே முன்வைக்கின்றேன். நூலகராகவும், ஈவ்லின் இரட்ணம் பல்லினப் பண்பாட்டியல் நூலகத்திற்கான உந்துசக்தியாக அமைந்த அவரது பங்களிப்புகள், நூலகவியல், நூலகங்கள் என்கிற கருத்தாக்கம், பட்டியலாக்கம் ஆகியவற்றிற்கான

அவரது பங்களிப்புகளுக்கும் மேலாக பதிப்பாக்கம், நூலொன்றினைப் பதிப்பித்தல் தொடர்பான தொழினுட்ப ரீதியிலான வழிகாட்டல்கள், உள்ளூரில் புத்தகம் ஒன்றைப் பதிப்பிப்பதிலும் சந்தைப்படுத்துவதிலும் விற்பதிலும் இருக்கக் கூடிய சவால்கள், அவற்றை எதிர்கொள்வதற்கான பொறிமுறைகள், இந்திய நூல்களால் ஈழத்துப் பதிப்புச்சூழல் எப்படி நசுக்கப்படுகின்றது, இவற்றுக்கு இடையில் நிகழக்கூடிய அசமத்துவம், வாசிப்பினைப் பரவலாக்கல், கிராமிய நூலகங்கள் என்பதை ஒரு செயற்பாடாக்குதல் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து தொடர்ந்து எழுதியும் உரையாடியும் செயற்பட்டும் வருகின்ற திரு.செல்வராஜா அவர்கள் "நூலியலாளர்" என்கிற சுட்டுதலுக்கு மிகப் பொருத்தமானவரே.

**நமக்கென்றொரு பெட்டகம்:** தமிழ்த்தேசிய நூலகச் சிந்தனைகள் என்கிற இந்தப் புத்தகத்தில் உள்ள அனைத்துக் கட்டுரைகளும் பேசுகின்ற விடயங்கள் பற்றிய சுருக்கத்தையும் கருத்துகளையும் கலாநிதி கல்பனா சந்திரசேகர் அவர்கள் முன்னர் தெரிவித்திருந்தார். எனவே இந்தப் புத்தகத்தில் உள்ள கருத்தாக்கங்கள் குறித்து நான் கவனப் படுத்துகின்றேன்.

இந்நூல் ஆவணக் காப்பகம், நூலகம் ஆகிய இரண்டினதும் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றதுடன் இவை இரண்டிற்குமான வேறுபாடுகளையும் எடுத்துரைக்கின்றது. ஒரு சமூகத்தின் வரலாற்றையும் பதிவுகளையும் சமகாலத்திலும் எதிர்காலத்திலும் வரக்கூடிய ஆய்வுத் தேவைகளுக்காக பேணிப் பாதுகாத்து வழங்கக்கூடிய இடமாக ஆவணக்காப்பகத்தை திரு.செல்வராஜா குறிப்பிடுகிறார். அதேநேரம் நூலகம் என்பது அனைத்துத் தரப்பினரது வாசிப்புத் தேவைகளையும் பூர்த்திசெய்யக்கூடியதாகவும் இலகுவில் அணுகக் கூடியதாகவும் இருக்கவேண்டும் என்பதை திரு.செல்வராஜா வலியுறுத்துகின்றார். பொதுவாக நாம் நூலகம் என்று யோசிக்கும்போது அங்கே இருக்கக் கூடிய கனமான விடயங்களை உள்ளடக்கிய "தீவிர இலக்கியம்" என்று சொல்லப்படக்கூடிய நூல்களையே நினைவில் கொள்வோம். ஆனால் செல்வராஜா நூலகங்கள் குறித்துப் பேசும்போதெல்லாம் சிறுவர் நூலகங்கள் குறித்தும் நூலகங்களை சிறுவர்களுக்கு அணுக்கமாக்குவது குறித்தும் விசேட அக்கறையுடன் இருப்பதை அவரது கட்டுரைகளுடாகத் தெரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்றது. சிறுவர் நூலகங்கள் குறித்தும் அங்கே எப்படியான புத்தகங்கள் இருக்கவேண்டும் என்பது குறித்தும் சிறுவர் நூலகங்கள் எப்படி ஒழுங்கமைக்கப்பட்டிருக்கவேண்டும் என்பது குறித்தும் அந்தப் புத்தகங்களை சிறுவர்களிடமும் சிறுவர்களைப்

புத்தகங்களிடமும் சேர்த்து வைப்பதற்கும் என்னவெல்லாம் செய்யவேண்டும் என்பது குறித்தும் அவர் கவனம் செலுத்துகின்றார்.

இந்தப் புத்தகத்தில் தீவகப் பிராந்திய நூலகம், புங்குடுதீவுப் பிராந்திய நூலகம் ஆகிய இரண்டு கட்டுரைகள் உள்ளடக்கப் பட்டிருக்கின்றன. இந்த நூல் வெளியீட்டிற்குப் பிற்பட்ட காலங்களிலும் மட்டக்களப்பிலிருந்து வெளிவந்துகொண்டிருக்கின்ற அரங்கம் என்கிற பத்திரிகையில் மட்டக்களப்பில் உருவாகிக்கொண்டிருக்கின்ற ஒரு நூ லகத்தின் உள்ளடக்கம் குறித்தும் பொது நூலகங்களின் தன்மை குறித்தும் அவர் எழுதிக்கொண்டிருக்கின்ற கட்டுரைத் தொடர் மிகப்பெறுமதியானது. கிராமங்களில் நூலகங்கள் குறித்து அக்கறைப் படுகின்ற, விதை குழுமத்தினூடாக புத்தகக் குடில் போன்ற சிறு நூலக அமைப்புத் திட்டங்களை முன்னெடுத்துவருகின்ற எமக்கு எழக்கூடிய பல குழப்பங்களுக்கும் கேள்விகளுக்கும் தொழினுட்பரீதியில் பதிலளிக்கக்கூடியதாக இந்தத் தொடர் அமைகின்றது.

ஒரு லண்டன் கடிதம் என்கிற கட்டுரை கடித வடிவில் மிக முக்கியமான ஒரு விடயத்தைப் பேசுகின்றது. புலம்பெயர் நாடுகளில் இருக்கின்ற முதல் தலைமுறை தமிழர்கள் புலம்பெயர் நாடுகளில் இருக்கின்ற தமக்கு அடுத்த தலைமுறையினருடன் கொண்டிருக்கக் கூடிய உறவு குறித்தும் அவர்களுடன் கொண்டிருக்கவேண்டிய ஊடாட்டம் குறித்தும் இந்தக் கட்டுரையில் குறிப்பிடப்படுகின்றது. அதேநேரம், புலம்பெயர் நாடுகளில் இருப்போர் தாயகத்தில் இருப்போரின் நாளாந்த நடவடிக்கைகளையும் அரசியல் நடவடிக்கைகளையும் Remote Politics செய்வது குறித்து இந்தக் கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் மிகமுக்கியமானவை. இந்தப் புத்தகத்தின் சமர்ப்பணத்தை இங்கே ஒருமுறை வாசித்துக் காட்டுகின்றேன்.

"ஈழத்தமிழர்களின் அறிவியல் முதுசொத்தை தலைமுறை தலைமுறையாகப் பெட்டகங்களில் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்குக் கையளித்துவந்த எமது மூதாதையினருக்கும், பெட்டகங்களையும் பெட்டகக் கலாசாரத்தையும் தொலைத்துநிற்கும் எமது தலை முறையினரின் முதுசொத்தை அடுத்த தலைமுறைக்கு கடத்த வழிதேடி அலையும் இளைய தலைமுறையினருக்கும் இந்நூல் சமர்ப்பணம்"

இந்தச் சமர்ப்பணத்தின் விளக்கமாக அமைந்ததே ஒரு லண்டன் கடிதம் என்கிற கடித வடிவிலான கட்டுரை.

*இந்நூலில் குறிப்பிடப்படுகின்ற தேசிய நூலகம் என்கிற கருத்தாக்கம் மிக முக்கியமான ஒன்று. தேசிய நூலகம் என்பது குறித்த தேசியத்தின் வரலாறு, பண்பாடு, அதன் நிலவியல், ஆளுமைகள், அந்த ஆளுமைகள் குறித்த பதிவுகள் ஆகியவற்றை எல்லாம் திரட்டிவைத்திருக்கின்ற ஒரிடமாக இருக்கவேண்டும் என்பதை செல்வராஜா வலியுறுத்துகின்றார். செல்வராஜா எழுதிய பல்வேறு கட்டுரைகளில் இலங்கையின் தேசிய நூலகங்கள் என்பவற்றுள் முறையாக உள்ளடக்கப்பட்டிராத/ வெளித் தள்ளப்படுபவர்களாக வடக்கு-கிழக்கு/ தமிழர்கள் சார்ந்த பதிவுகள் இருப்பதை அவர் ஆதாரபூர்வமாகவும் புள்ளிவிபரங்களூடாகவும் முன்வைத்து வருகின்றார். அப்படி வெளித்தள்ளப்பட்டு/ உள்வாங்கப் படாதவர்கள் இலங்கை தேசியம் அல்லாத இன்னொரு தேசியர்களாக தம்மை உணர்கின்றனர் என்கிற விடயத்தையும் திரு.செல்வராஜாவின் எழுத்துகளினூடாக உணர முடிகின்றது. தமிழ், மலையக, முஸ்லிம் தேசிய இனங்களை இந்தக் கண்ணோட்டத்தில் அரசியல் ரீதியாகவும் புரிந்துகொள்ளமுடிகின்றது.*

*இவ்வாறு நூலகங்கள் எவற்றைத் தம்முள் கொண்டிருக்கவேண்டும் என்று பேசுகின்றபோது வடபகுதியில் தனியார் நிதியுதவியுடன் நூலக மொன்றிற்கு என்று பெரியதோர் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு விட்டதாகவும் அதற்குப் புத்தகங்கள் தேவையென்றும் வந்த பத்திரிகை அறிவிப்பொன்றைக் குறிப்பிடும் செல்வராஜா, கட்டிடம் கட்டவதில் காட்டப்படும் அக்கறை, அந்நூலகத்திற்கான நூலீட்டல் பற்றி கட்டிடம் கட்டியவர்கள் மன்னதாகச் சிந்தித்துச் செயற்படாதிருந்த அவலத்தை உணர்த்துகின்றார். பல்வேறு தனிநபர்களாலும் அமைப்புக்களாலும் ஏற்கனவே திரட்டப்பட்ட, சேகரித்து வைக்கப்பட்ட, ஆவணப்படுத்தி வைக்கப்பட்ட புத்தகங்களை ஒன்றிணைத்தே தமிழ்ப் பிரதேசத்தில் தேசிய நூலகத்தினை அல்லது ஆவணக் காப்பகங்களை உருவாக்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றார். நூலகம் என்பது கட்டப்பட்ட கட்டடத்தினை புத்தகங்களால் நிறைத்துவைப்பது அல்ல என்பதை செல்வராஜா ஆணித்தரமாக எடுத்தியம்புகின்றார். யாழ்ப்பாண பொதுசன நூலகம் உருவாக்கப்பட்டபோது அது பல்வேறு தனிநபர்களின் சேகரங்களினையும் ஒன்றிணைத்தே உருவாக்கப்பட்டது என்பது தொடர்பான தகவல்களை எஸ்.எம்.கமால்தீன், க.சி.குலரத்தினம் ஆகியோர் யாழ்ப்பாண பொதுசன நூலகம் பற்றி எழுதிய நூல்களில் இருந்து செல்வராஜா சுட்டிக்காட்டுகின்றார்.*

நூலகங்களை உருவாக்குதல், ஆவணக் காப்பகங்களை உருவாக்குதல் என்பவற்றைப் போன்றே புத்தகச் சந்தைகள் குறித்து செல்வராஜா குறிப்பிடுகின்ற விடயங்களை இந்த இடத்தில் பேசுவது முக்கியமானது என்றே கருதுகின்றேன். இந்தியாவில் இருந்து வெளிவருகின்ற புத்தகங்களை குறிப்பாக அரசியல் நீக்கம் செய்யப்பட்ட அல்லது வலதுசாரி அரசியலைப் பேசுகின்ற புத்தகங்களைப் பெற்றுக்கொள்வது கனடாவில் இலகுவானதாகவே இருக்கின்றது. ஆனந்த விகடன், குமுதம் போன்றவற்றை பெரும்பாலான பலசரக்குக் கடைகளில் கூடப் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவே இருக்கின்றது. அண்மைக்காலமாக பகவத் கீதையை பலசரக்குக் கடைகளில் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. ஆனால் "எங்கட புத்தகங்களை"ப் பெற்றுக்கொள்வது என்பது சிரமமானதாகவே இருக்கின்றது. இங்கே நான் "எங்கட புத்தகங்கள்" என்று சொல்வதை தெளிவாக வரையறை செய்ய விரும்புகின்றேன். "எங்கட புத்தகங்கள்" என்பது யாழ்ப்பாணப் புத்தகங்களோ, கொழும்புப் புத்தகங்களோ, கிளிநொச்சி, மட்டக்களப்பு, திருக்கோணமலை, அம்பாறை, மலையகப் புத்தகங்களோ அல்ல, ஈழத்தவர் நோக்கில் இருந்து இந்தியப் புத்தகங்கள் அல்லாத, ஈழத்தவரின் புத்தகங்களைக் குறிப்பிடுவதற்கான ஒரு சொல்லாகவே "எங்கட புத்தகங்கள்" என்ற பிரயோகத்தை நான் புரிந்துகொள்ளுகின்றேன். ஏன், புலம்பெயர் நாடொன்றில் இருந்து வெளிவரும் புத்தகம் ஒன்றினை இன்னொரு புலம்பெயர் நாட்டினில் பெற்றுக்கொள்வதும் சந்தைப்படுத்துவதும் கூட சிரமமானதாகவே இருக்கின்றது. புலம்பெயர் நாடுகளில் புத்தக விற்பனையைச் செய்கின்ற சிலரின் "எங்கட புத்தகங்கள்" என்றால் பணம் கொடுத்து வாங்கமாட்டார்கள், அவை இலவசமாகக் கொடுக்கப்படவேண்டியவை என்கிற அபிப்பிராயமும் இருக்கின்றது. இவற்றுடன் சேர்த்துத்தான் புத்தகச் சந்தைகளுக்குப் பின்னால் இருக்கக்கூடிய அரசியலை நாம் பேசவேண்டியிருக்கின்றது.

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் முன்றலில் ஒழுங்குசெய்யப்பட்டதொரு புத்தகச் சந்தையில் இந்தியத் தூதுவராலயத்தின் வகிபாகம், அந்தப் புத்தகக் கண்காட்சியில் விற்கப்படாத இந்தியப் புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டு தமிழர் பிரதேசத்தில் உள்ள நூலகங்களுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியின் 3000 பிரதிகள் இலங்கையில் தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள நூலகங்

களுக்காக வட மாகாண ஆளுநரான இராணுவ அதிகாரியின் வற்புறுத்தலின் மூலம் கொள்வனவு செய்யப்பட்டிருக்கின்றன. அதேநேரம் இலங்கையில் இருந்து வெளிவருகின்ற தமிழ்நூல்கள் இவ்வாறு கொள்வனவு செய்யப்படாமல் புறக்கணிக்கப்படுகின்றமை போன்றவை குறித்து அவரது உரையாடல் விரிந்து செல்கின்றது.

இலங்கையில் இருக்கின்ற புத்தகக் கடைகளின் காட்சிப் படுத்தல்களில் இலங்கையில் இருந்து வெளிவரும் புத்தகங்கள் மெல்லமெல்லமாக பின்னுக்குத் தள்ளப்பட்டு, அவை பயிற்சிப் புத்தகங்களுடனும், பின்னர் அங்கிருந்து பின்னுக்குத் தள்ளப்பட்டுப் பழைய புத்தகங்கள் வைத்திருக்கின்ற பகுதிகளுக்கும் சென்றிருப்பதை கடந்த 12 ஆண்டுகளாக இலங்கைக்குச் சென்றுவரும் போதெல்லாம் அவதானித்துவருகின்றேன். இப்படியான சூழலில் புத்தகக் கண்காட்சிகளில் இந்தியப் புத்தகங்களை நிறைத்து, ஈழத்துப் புத்தகங்களைப் புறக்கணித்து புத்தகங்கள் என்றாலே இந்தியப் புத்தகங்கள் என்கிற தோற்றப்பாட்டினை உருவாக்குவதற்கான ஒரு எதிர்ப்புச் செயற்பாடாகவே “எங்கட புத்தகங்கள்” என்கிற பெயரில் ஈழத்தவர் நூல்களை விற்கின்ற கண்காட்சி அமைகின்றது. எந்தப் பிரதேசத்துக்கும் முன்னுரிமை வழங்கப்படாமல் ஈழத்தவர்களின் புத்தகங்கள் என்கிற நோக்குடன் அது இயங்குவதே அதன் நோக்கத்தை நிறைவாக்கும். எங்கட புத்தகங்கள் என்கிற கண்காட்சியும் இதழ் வெளியீடும் அவற்றின் தொடர்ச்சியான பதிப்பக முயற்சிகளையும் இந்தியாவினால் பிரயோகிக்கப்படும் பண்பாட்டு ஆதிக்கத்துக்கு எதிரான எதிர்ப்பு நடவடிக்கைகள் என்கிற பிரக்ஞையின் அடிப்படையில் மிக முக்கியமான செயற்பாடுகளாகப் பார்க்கின்றேன்.

“நமக்கென்றொரு பெட்டகம்” நூலினை அடிப்படையாக வைத்து நூலியல் குறித்ததும் நூலகவியல் குறித்ததுமான என்.செல்வராஜா அவர்களின் கருத்தாக்கங்கள் மற்றும் முன்வைப்புகள் குறித்து இதுவரை பேசியிருந்தேன். ஆனால் இந்தப் பரப்புகளில் நூலியலாளர் என். செல்வராஜாவின் பங்களிப்பு இன்னும் காத்திரமானது. கிராமிய நூலகங்கள், புத்தகக் குடில்கள் போன்ற விதை குழுமத்தின் செயற்திட்டங்களை இன்னும் விளைதிறனும் வினைத்திறனும் கிராமிய மக்களின் பங்கேற்பும் கொண்டதாக மாற்றுவது குறித்தும் அதில் நாம் எதிர்கொள்ளுகின்ற சவால்கள் குறித்தும் தோழர் சத்தியதேவனுடன் உரையாடிக்கொண்டிருந்த பொழுதொன்றில்தான் அவர் திரு. செல்வராஜா அவர்களின் “கிராமிய நூலகங்களும் அபிவிருத்தியும்”

என்கிற நூலினை அறிமுகம் செய்தார். அந்த நூலானது எமக்கான பல கிடப்புகளைத் திறந்துவிட்டது. "கிராமிய நூலகங்களும் அபிவிருத்தியும்" நூலை வாசித்தபின்னர் தான், "எமக்கென்றொரு பெட்டகம்" என்கிற நூலிற்கான மூலம் அல்லது விதை கிட்டத்தட்ட 40 வருடங்களுக்கு முன்னரே தூவப்பட்டுவிட்டது என்பதை நன்குணர்ந்தேன். கிட்டத்தட்ட நாற்பது வருடங்களுக்கு முன்னர் செல்வராஜா அவர்களும் நண்பர்கள் சிலருமாய் இணைந்து "நூல் வங்கித் திட்டம்" என்ற ஒன்றினை முன்னெடுக்கின்றார்கள். திரு. செல்வராஜா அவர்கள் எழுதி, நூலகம் இணையத்தளத்திலே நீங்கள் காணக்கூடிய "சர்வோதயம் - கிராம நூலகர்களுக்கான வழிகாட்டி" என்கிற சிறுபிரசுரத்தின் பின்பக்கத்தில் நான்கு விடயங்களைப் பட்டியலிட்டிருப்பார்கள்.

- கிராமங்கள்தோறும் நடமாடும் நூலகம்
- வீடுகள்தோறும் குடும்ப நூலகம்
- பள்ளிகளுக்கேற்ற மாணவர் நூலகம்
- ஊர்கள்தோறும் பொதுநூலகம்

ஆகியவற்றை உருவாக்கவும் உருவாக்கியதை வளர்க்கவும் உதவும் திட்டம் இது.

செல்வராஜாவின் கருத்தாக்கங்களில் முக்கியமான ஒன்றாக இதை நான் கருதுகின்றேன். கிராமங்கள் தோறும் நடமாடும் நூலகம் என்பதன் செயல்வடிவமே அவருடைய "நூல் வங்கித் திட்டம்". அது என்னவென்றால் ஓரிடத்தில் இருக்கின்ற பிரதான நூலகத்தில் நூல் வங்கித் திட்டத்தின் மூலம் சேகரித்துவைக்கும் புத்தகங்களை, அவற்றை விரும்பிப் படிக்கின்ற வாசகர்கள் குழுக்கள் மற்றும் ஆரம்பநிலை வாசகர்களை நோக்கி, அவர்களது கிராமங்களுக்கும், வீடுகளுக்கும் தன்னார்வலர்களினூடாக எடுத்துச் செல்லுதல் என்பதை அடிப்படைச் செயன்முறையாக கொண்டியங்குவதாகும். இதன்மூலமாக கிராமங்களில் வாசிப்புப் பண்பாடு விருத்தியடைவதுடன் வீட்டு நூலகங்களை அமைப்பதும் பரவலாகும். வாசிப்புப் பழக்கம் விருத்தியடைந்தாலே நூலகங்கள் வளர்ச்சியடையும். "நாம் கட்டடங்களைக் கட்டலாம், புத்தகங்களால் அவற்றை நிரப்பலாம். ஆனால் வாசகர்களாலும், அவர்களின் பயன்பாட்டினாலுமே நூலகங்கள் உயிர்ப்பாக மாறும்" என்கிறார்.

அதுபோல "கிராம நூலகங்களும் அபிவிருத்தியும்" நூலில் அவர் கிராமிய நூலகமொன்றின் சேவைகள் என்று ஒரு பட்டியலை இட்டிருப்பார். அந்தப் பட்டியல்,

1. வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவித்தல்
2. கிராமம் தொடர்பான வரைபடம், புள்ளிவி-பரங்களைச் சேகரித்தல்
3. கிராமப் பெரியார்களின் வாழ்க்கைக் குறிப்புகள், கடிதங்கள், அவர்களின் வெளியீடுகளைச் சேகரித்தல்
4. கோயில்கள், புனிதத் தலங்கள் பற்றிய வரலாற்றுக் குறிப்பு
5. கல்வெட்டு, சிறப்பு மலர்கள் போன்றவற்றைச் சேகரித்தல்
6. பத்திரிகைகளின் அந்தக் கிராமம் தொடர்பாக வருகின்ற வெட்டுத்துண்டுகளைச் சேகரித்தல்
7. கருத்தரங்கு, வாசகர் வட்டம், நூல் விமர்சன கூட்டம் போன்ற வற்றை ஒருக்கிணைத்தல்
8. சிறுவர் பிரிவை அமைத்தல்

என்றவாறாக அமைகின்றது. இப்படியான செயற்திட்டங்களை கிராம நூலகங்கள் முன்னெடுக்கும்போது அந்தக் கிராமங்கள் முன்னேற்றப் பாதையில் நகர்வதோடு அந்த நகர்வில் அந்தக் கிராமத்து மக்களும் பிரக்ஞைபூர்வமாக பங்கேற்பதும் உறுதிசெய்யப்படும். நூலகங்கள் - கிராம நூலகங்கள் - அவற்றின் சமகாலத் தேவைகள் என்கிற பெரும்பரப்பிற்கான முக்கியமான பரிந்துரைகளாக இவற்றை நான் கருதுகின்றேன். முன்னர் வாசிப்பதற்குப் புத்தகங்கள் வருவதில்லை என்று தப்பித்துக் கொள்ளல் தொடர்ச்சியாகச் சொல்லப்பட்டுவந்தது. ஆனால் இன்று பல முக்கியமான விடயங்கள் மொழியாக்கம் செய்யப்பட்டு தமிழில் வந்துகொண்டே இருக்கின்றன. ஈழத்திலும் கூட முக்கியமான பலநூல்களை குமரன், பூபாலசிங்கம் போன்ற பதிப்பகங்கள் வெளியிட்டுக்கொண்டே இருக்கின்றன. ஆனால் அவை எத்தனை பேரால் வாசிக்கப்படுகின்றன என்பது குறித்து ஆராயவேண்டி இருக்கின்றது. சமூக வலைத்தளங்களின் செல்வாக்கு, காணொலிகளின் மீதான நாட்டத்தின் அதிகரிப்பு போன்ற பல்வேறு காரணிகளை நாம் இதற்குக் காரணமாகச் சொல்லலாம். அதேநேரம் இன்னொரு விடயத்தையும் நான் ஆய்வுநோக்கில் முன்வைக்க விரும்புகின்றேன்.

நாம் சிறுவர்களாகவும் பதின்ம பருவத்தினராகவும் இருந்த தொன்னூறாம் ஆண்டுகளில் - நான் அப்போது நவாலி/சுதுமலையில் வாழ்ந்தேன் - கொக்குவில் நாச்சிமார் கோயிலுக்கருகாமையில் பெரியதொரு நூலகம் இருந்தது. ஆனைக்கோட்டை கிராமசபை நூலகம் இருந்தது, மானிப்பாய் நகரசபை நூலகம் இருந்தது. இவற்றுக்கு எல்லாம் சில தடவைகள் போய் இருக்கின்றேன். ஆனால் அவற்றை அணுகுவது எனக்கு இயல்பானதாக இருக்கவில்லை. ஆனால் மானிப்பாயை அண்டிய இடங்களில் இருந்த சின்னச் சின்ன நூலகங்களையெல்லாம் தேடித்தேடிப்போய் புத்தகங்களை எடுத்து வாசிப்பவனாக இருந்திருக்கின்றேன். இப்படியான பல நூலகங்கள் சிறு கடைகளின்/பாடசாலை உபகரணங்களைப் பிரதானமாக விற்கின்ற கடைகளின் பகுதியாக இருந்தவை. மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு எதிராக இருந்த ஒரு சிறுகடை, மானிப்பாய் நாயகபாலன் புத்தகக் கடை, மருதடிப் பிள்ளையார் கோயிலுக்கு அருகாமையில் இருந்த ஒரு கடை, கொக்குவில் ஞானம் புத்தகக் கடை போன்ற கடைகளைச் சொல்லலாம். இவற்றில் 4 அல்லது 5 தட்டுகளைக் கொண்ட ஒன்று அல்லது இரண்டு புத்தக இறாக்கைகளில் வைக்கப்பட்டிருந்த புத்தகங்களைத் தேடித்தேடி வாசித்திருக்கின்றேன். நான் கூட எனது 11 - 13 வயது காலப்பகுதியில் எனது வீட்டில் "லிட்டில் லைப்ரரி" என்ற பெயரில் ஒரு நூலகத்தை நடத்திவந்தேன். அதில் 25 பேர் அங்கத்தவர்களாக இருந்தனர். அக்காலத்தில் நான் வசித்துவந்த நவாலியில் எமது வீட்டுக்கு அருகில் வசித்துவந்த சர்வேஸ்வரன் என்பவர் வாசிஜா என்கிற அவரது வீட்டில் இயங்கி வந்த நூலகத்தில் ஒவ்வொரு நாளும் புத்தகங்களை எடுத்து வாசித்திருக்கின்றேன். அந்த வயதுக்குரிய அலட்சியங்களைத் தவிர்த்துப் பார்த்தால் வாசிப்புப் பண்பாடு என்கிற செயற்பாட்டிற்கான எனது பங்களிப்பாகவே இவற்றைப் பார்க்கின்றேன். அதுபோலவே, இங்கே நான் குறிப்பிட்ட சிறுநூலகங்களை நான் இலகுவாக தொடர்ச்சியாகப் பயன்படுத்தியதற்கும் அவை எனக்கு அணுக்கத்திற்கு இலகுவாக அமைந்தமையே காரணமாக இருக்கும்.

இப்பொழுது நான் யோசித்துப்பார்க்கின்றபோது, அன்று இப்படியாக கிராம மட்டத்தில் இயங்கிய சிறு நூலகங்கள் மட்டும் இல்லாது போயிருந்தால் நான் ஒருவேளை தொடர்சியாக வாசிப்பினைத் தொடர்ந்த ஒரு வாசகனாக உருவாகமலே போயிருந்திருக்கக்கூடும். அந்த அனுபவத்தின் அடிப்படையிலேயே, ஒவ்வொருவருக்கும் அவர்கள்

வாழ்கின்ற பிரதேசத்தில், அவர்கள் விரும்பிப் படிக்கக் கூடிய நூல்களையும் கொண்டுள்ள, அவர்களுக்கு அணுக்கமாக இருக்கக் கூடிய சிறுநூலகங்களே வாசகர்களை அதிகரிக்கவும் வாசிப்பில் மேம் பாடடையச் செய்யவும் உதவும் என்பதை முழுமையாக நம்புகின்றேன். கலாநிதி கல்பனா சந்திரசேகரின் உரையில் "நமக்கென்றொரு பெட்டகம்" நூல் குறித்த உரையினதும், நூலியலாளர் செல்வராஜா அவர்கள் நூலியல், நூலகவியலுக்கு ஆற்றிய பங்களிப்பு குறித்த எனது உரையினதும் தொடர்ச்சியாகவும் இவற்றை முழுமையாக்குவதாகவும் செல்வராஜா அவர்கள் ஆற்றவுள்ள கிராமிய நூலகங்களின் சமகாலத் தேவைகள் என்கிற உரையும் அதன் தொடர்ச்சியாக நடக்கவுள்ள உரையாடலும் நிகழவுள்ளது. அந்த ஆவலுடன் உங்கள் எல்லாரிட மிருந்தும் விடைபெற்றுக்கொள்கின்றேன்.

நன்றி

# கிராம நூலகங்களும் அவற்றின் சமகால தேவைகளும்

நூலியலாளர் திரு.என்.செல்வராஜா
நிறுவுநர்- ஐரோப்பிய தமிழ் ஆவணக் காப்பகமும் ஆய்வகமும்-
பிரித்தானியா.

இங்கு இருவருக்கு நான் முதலில் நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். எனது நூல் அறிமுக நிகழ்வை ஒழுங்கு செய்ததற்காக விதை குழுமம் செயற்பாட்டாளர்களுக்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுவரை நான் அரங்குகளில் நூல் வெளியீடுகள் செய்தது மிகவும் சொற்பமே. என்னைப் பொறுத்தவரை வெளியீட்டு விழாக்கள் செலவுக்குரிய ஒரு விடயமாக உள்ளன. ஆனால் இப்போது ZOOM தொழில்நுட்பம் அறிமுகமாகி இருப்பதால் நூல் அறிமுக நிகழ்வுகள் எளிதாகவும் பயன்மிக்கதாகவும் பலரையும் இலகுவில் அடையக் கூடியதாகவும் அமைகின்றன. நிகழ்ச்சிக்கு சமுகமளிக்க முடியாதவர்கள் அந் நிகழ்ச்சியை பிறிதொரு வேளையில் பார்வையிடும் வாய்ப்பும் உள்ளது. அந்த வகையில் இந்நிகழ்வை ZOOM ஊடாக ஒழுங்கு படுத்தியதற்கு விதை குழுமத்திற்கும் அதன் செயற்பாட்டாளர்களுக்கும் முதற்கண் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இது எனது 57ஆவது நூல். ஆனால் இந்த நூலுக்குப் பின் யாழ்ப்பாண நூலகம் பற்றிய ஆங்கில நூலின் இரண்டாவது பதிப்பும் வெளிவந்துவிட்டது. அத்துடன் நூல்தேட்டத்தின் 15ஆவது தொகுதியும் இதற்குப்பின் வந்துள்ளது. 60ஆவது நூலாக நூலகவியல் சஞ்சிகையின் பெருந்தொகுப்பு வெளிவர இருக்கிறது. கொரொனாவின் பக்க விளைவுகளில் ஒன்றாக இப்பொழுது எம்மவரிடையே புதிய நூல்கள் பல உருவாகி வருகின்றமை ஆரோக்கியமான செயற்பாடுதான்.

நான் இரண்டாவதாக நன்றி தெரிவிக்கவேண்டியது கலாநிதி திருமதி கல்பனா சந்திரசேகர். மிக அருமையாக எனது நூலை நேரம் ஒதுக்கி வாசித்து குறிப்பெடுத்து இங்கு உரையாற்றியுள்ளார்.

அடுத்து நான் எனது உரைக்கு வரலாம் என நினைக்கிறேன்.

**கிராம நூலகங்களும் அவற்றின் சமகால தேவைகளும்**

*கிராமிய நூலக எழுச்சி என்பது அண்மைக் காலத்தில் தோன்றிய ஒன்றல்ல. அது பல தலைமுறைகளுக்கு முன்னதாக கருக்கொண்ட சிந்தனை. அரசாங்கத்தின் பொது நூலக சேவைத் திட்டங்கள் சமூகத்தில் முன்னெடுக்கும் வேகம் வீழ்ச்சியடையும் போதெல்லாம், கிராமிய நூலக எழுச்சிகளும் வரலாற்றுத் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டுதான் வருகின்றன. இத்தகைய ஒரு பொது நூலக சேவையின் தளர்வின்போது தான், 1970களில் நாம் இளைஞர்களாக இருந்து எம்மவரிடையே வாசிப்பை ஊக்குவிக்கும் கிராமிய நூலக செயற்திட்டங்களில் பல பரிசோதனை முயற்சிகளை செய்தோம். அப்போது தமிழ்ப் பிரதேசங்களில் நூலகக் கல்வியின் ஆரம்பகாலம். அவ்வேளையில் தான் நம்மில் சிலர் தமிழ்ப் பிரதேசங்களில் நூலக சேவையினூடாக வாசிப்பை ஊக்குவிக்கவேண்டும் என்ற ஆவலில் ஒன்றுசேர்ந்து நாமே நமக்கான பாதையை உருவாக்கி அதில் பயணமும் செய்தோம். அக்காலத்தில் எம்மிடம் தமிழ் நூல்கள் இத்துறையில் வெளிவந்திருக்கவில்லை. எஸ்.எம்.கமால்தீனின் பாடசாலை நூலகம் சார்ந்த ஒரு நூலே தமிழில் இலங்கையில் இருந்தது. இந்தியாவில் அவ்வேளையில் ஓரிரு தமிழ் நூல்கள் இத்துறையில் வெளிவந்திருந்தாலும் அவற்றின் மொழிநடை எமக்கு ஏற்புடையதாக இருக்கவில்லை. எமது கைக்கெட்டிய ஆங்கில நூல்களை வாசித்தும், எமக்குக் கிடைத்த அனுபவ ஞானத்தைக்கொண்டும் பரிசோதனை முயற்சியாகவே பல விடயங்களைச் செய்தோம். அப்படி வெளிவந்ததே "கிராம நூலகங்களும், அபிவிருத்தியும்" என்ற நூல். இதைத்தான் சகோதரர் அருண்மொழிவர்மன் ஏற்கெனவே தனது உரையில் குறிப்பிட்டிருந்தார். இந்நூலில் அன்றைய காலகட்டத்தில் எனக்கேற்பட்ட பல அனுபவங்களின் வெளிப்பாடுகளாக நான் ஊடகங்களில் எழுதிய கட்டுரைகளையே தொகுத்திருந்தேன்.*

*நான் ஏற்கனவே கூறியதுபோல பொதுநூலக சேவையின் வீழ்ச்சியே கிராமிய நூலக எழுச்சியாக உருவாகிறது. அறிவுசார்ந்த இளைஞர் மத்தியில் இது தவிர்க்கமுடியாதது. பொதுநூலக சேவையில் மிக முக்கிய சேவை ஒன்று உள்ளது. "நடமாடும் நூலக சேவை" என்ற அந்தச் சேவை மிகவும் சிறப்பானது. நூலகத்தை பயன்படுத்த இயலாத மக்களை நோக்கி நூலக சேவைகளை கொண்டுசெல்லல் அல்லது சேவைப் பரப்பினை விரிவாக்குவதே நடமாடம் நூலகசேவையின் முக்கிய நோக்கம். மிகுந்த பணச்செலவில் வாகனங்கள் வாங்கப்பட்டு, அதில் நிரந்தரமானதும் பாதுகாப்பானதுமான புத்தக இறாக்கைகள்*

அமைத்து, அவற்றை புத்தகங்களால் நிரப்பி, அவ்வாகனத்தை நூலகம் இல்லாத குடியிருப்புகளுக்கு- கிராமங்களுக்கு கொண்டுசென்று வாசிப்பைத் தூண்டுவது அத்திட்டத்தின் நல்நோக்கு. ஆனால் தமிழ்ப் பிரதேசங்களில் இந்த நடமாடும் சேவையில் பொது நூலகங்கள் கிராமங்களுக்கு புத்தகங்களைக் கொண்டுசென்று கொடுப்பது என்பது ஒரு பிழையான அல்லது தொடர்ச்சியாக இயங்கமுடியாத ஒரு வகையில் தான் செயற்படுத்தப்பட்டுவருகிறது. அதாவது அதற்கு ஒரு பஸ்வண்டியும், ஓட்டுநரும் இருந்தால் தான் செய்யலாம் என்ற ஒரு நிலைமை இப்போது நூலகர்களின் சிந்தையில் வந்து குந்திவிட்டது. ஆனால் உண்மை அப்படியல்ல. நடமாடும் நூலக சேவையினை மேற்கொள்ள பஸ்வண்டி தான் வேண்டும் என்ற எண்ணம் தவறானது.

நான் ஒரு வருடம் இந்தோனேசியாவில் "ஐக்கிய நாடுகள் தொண்டர் சேவையில்" இருந்த போது அங்கு சைக்கிள்களில் சிறிய பெட்டிகளில் புத்தகங்களைப் போட்டு பிரதான நூலகத்திலிருந்து பத்துப் பதினைந்து மைல்களுக்கு அப்பால் உள்ள கிராமங்களுக்கு அவற்றைக் கொண்டு செல்வதைக் கண்டிருக்கிறேன். நான் தங்கியிருந்த கிராமத்துக்கும் வருவார்கள். அப்படியாக நூல்களைச் சுமந்து கொண்டு வருபவர்கள் நூலகர்கள் அல்ல. நூலகத் தொண்டர்களே அப்பணியினை இலவசமாகச் செய்கிறார்கள். நூலகர்கள் அவர்களுக்கு வேண்டிய நூல்களைக் கொடுத்து வழியனுப்பி வைப்பார்கள். அவர்களுக்கான வழிகாட்டு தல்களை மேற்கொள்வார்கள். அப்போதும் அங்கு இராணுவ ஆட்சிதான் நடைபெற்றது. பொருளாதார ரீதியாக பொதுநூலக அபிவிருத்தி மிகவும் குறைந்திருந்தது. பாடசாலை நூலகங்கள் குறிப்பிடத்தக்கதாக இல்லை. கிராமிய நூலகம் என்பது "ஒரு சைக்கிளும் அதில் கட்டப்பட்ட மரப்பெட்டியுமாகவே" இருந்தது. சைக்கிள்கள் வரும்போது சின்னப் பிள்ளைகள் ஓடிவந்து அவர்கள் வழமையாகக் கூடும் ஒரு மரத்தடியில் நின்று அந்தப் புத்தகங்களை வாசிப்பதைக் காண முடிந்தது. இங்கு நடமாடும் நூலக சேவையில் இவர்கள் கடைப்பிடிக்கும் மிக முக்கிய அம்சம் காலம் தவறாமையாகும். குறித்த தினத்தில்-குறித்த நேரத்தில் இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை இந்த "சைக்கிள் நூலகர்கள்" வந்து சேர்வார்கள். அன்றைய காலைப்பொழுது அந்தப் பிஞ்சுகளுக்கும், சில இளையோருக்கும் இனிமையாகக் கழியும்.

முன் ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்திலும் நடமாடும் நூலக சேவை பெயரளவில் இருந்தது. அதற்காக ஒரு பேருந்தும் இருந்ததாக நினைவு. அந்தப் பேருந்தை நான் தெருவில் கண்டதை விட அதன் தரிப்புக்

கொட்டகையில் தான் அந்நாட்களில் அதிகம் கண்டு ஏங்கினேன். இப்பொழுது நிலைமை மாறியிருக்கலாம். இந்தோனேசியா போன்று சிறிய அளவிலாவது மக்கள் மயப்படுத்திய வேலைத்திட்டங்களை மாநகரசபைகளும், நகரசபைகளும் அன்று முன்னெடுத்திருந்தால் கிராமம் முழுக்க புத்தக வாசிப்பைக் கூட்டியிருக்கலாம். ஆனால் அது நடக்கவில்லை. அதனாலேயே எம்மால் சனசமூக நிலையங்களை கிராமநூலக வேலைத்திட்டங்களுக்கு உள்வாங்க வேண்டியிருந்தது. பல வாசிகசாலைகள் இளைஞர் எழுச்சிகளால் நூலகங்களாயின. இது எமக்குக் கிட்டிய வெற்றியாகவும் அமைந்தது.

இன்று எமது ஊர்களில் எத்தனையோ சிறுவர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள், சனசமூக நிலையங்கள் உருவாகி இருக்கின்றன. தனியார் நூலகங்களும் இலைமறை காய்களாக ஆங்காங்கே இயங்குகின்றன. இவர்கள் எல்லோரிடமும் இந்தப் பொதுநூலகங்கள் பரந்த அளவில் போயிருந்தால் எமது சமூகத்தில் இன்று காணப்படும் வாசிப்புப் பிரச்சினை பெரிதாக வளர்ந்திருக்காது. ஆனால் விரல்விட்டு எண்ணக்கூடிய நூலகங்கள்தான் இன்று இந்த சிறுவர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள், சனசமூக நிலையங்கள் போன்றவற்றுக்கான விரிவாக்க சேவையை வழங்கிவருகின்றன. உதாரணமாக நான் சொல்வதானால் சுன்னாகம் பொது நூலகம் அப்பிரதேசத்திலுள்ள சில முதியோர் இல்லங்களுக்கு சிறிய பெட்டிகளில் நூல்களை எடுத்துச் சென்று வழங்குகிறார்கள் என்பதை அறியமுடிகின்றது. அதேபோல் கொக்குவில் நூலகம் "அரோட்" என்ற மாற்றுத்திறனாளிகளின் இல்லம் ஒன்றிற்கு மூன்று மாதத்திற்கு ஒரு முறை புத்தகங்களை கொடுத்து மாற்றி வந்தார்கள். அதனைத் தொடர்கிறார்களா என்று தெரியவில்லை. இவையும் ஒரு வகையில் நடமாடும் நூலக சேவைகள் தான். பெரும் பொருட்செலவின்றி இவற்றை திட்டமிட்டு மேற்கொள்ளலாம். அதற்கான சமூக உணர்வுள்ள நூலகர்கள் எம்மிடையே வளர்த் தெடுக்கப்படவேண்டும். இன்றைய பொது நூலகங்களில் பல பொது மக்களின் தொடர்பாடல் அற்று வெறும் அலுவலகங்களாக ஏனோ தானோ என்று இயங்குவதை அவதானிக்க முடிகின்றது. இலவசமாக வழங்கப்படும் நூல்களைச் சேகரிப்பதில்கூட அவர்கள் அக்கறை காட்டாமல் இருப்பது வேதனைக்குரியதாகும்.

இத்தகைய பொது நூலகங்களின் சேவைகள் கிராமத்திற்குக் கிட்டாத நிலையில், கிராமங்களில் நாம் நமக்கான கிராம நூலகங்களை அங்குள்ள தொண்டர்களின் இல்லங்களிலாவது உருவாக்க வேண்டும்

என்ற நிலைமையே உருவாகின்றது. அதன்மூலம் எமது கிராமத்துச் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை நூல்களை எடுத்து வாசிக்கக் கூடியதான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

இனித் தொடரும் எனது உரையில் கிராம நூலகங்களின் சேவைகள் மேற்குறிப்பிட்டவை மாத்திரம் அல்ல என்பதையும் அதற்கும் அப்பால் அதற்கானதொரு விரிதளம் உள்ளதென்பதையும் தொட்டுக் காட்டிச்செல்ல விரும்புகின்றேன். உங்கள் கேள்விகளிலும் எனது பதில்களிலுமே அதன் ஆழம் தங்கியுள்ளது.

வட புலத்தில் கிராமிய நூலகங்கள், சனசமூக நிலையங்களின் பங்களிப்புடனேயே அன்றைய நாளில் உருவாகின. பத்திரிகைகளையும் ஒரு சில பருவ வெளியீடுகளையும் ஊர்மக்களின் நிதியில் வாங்கி வைத்து ஒரு வாசிகசாலையாகச் சேவையாற்றி வந்த ஊர் இளைஞர் களிடம் நூல்களை அறிமுகம் செய்து, அவர்களின் உதவியுடன் வாசிகசாலைகளை கிராம நூலகங்களாக மாற்ற வழியமைத்தவர்களுள் மில்க்வைற் கனகராசா அவர்கள் குறிப்பிடத்தகுந்தவர். நானறிந்த வகையில் சனசமூக நிலையங்கள் மிக ஆழமாக வேரூன்றியிருந்தது வடகிழக்குப் பிராந்தியங்களில்தான் என்பது எனது நம்பிக்கையாகும். பின்னாளில் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பல இளைஞர்கள் தாம் தமக்கான அரசியல் அறிவை தம்மூர் சனசமூகங்களின் வாயிலாகவே பெற்றுக்கொண்டிருந்ததாக பின்னாளில் எழுதி வருவதிலிருந்து அதன் சமூக ஈடுபாடு புலனாகின்றது.

வடக்கில் 80களில் யாழ்ப்பாண மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் என்றவொரு அமைப்பு யாழ்ப்பாண நகரத்தையண்டிய கொட்டடியில் இயங்கிவந்தது. அதில் 300க்கும் அதிகமான சனசமூகநிலையங்கள் அங்கத்துவம் வகித்தன. மாதாந்தம் கொட்டடியில் இருந்த தலைமை அலுவலகத்தில் அவர்கள் சந்தித்து தமது வேலைத்திட்டங்களை கலந்தாலோசித்துக்கொண்டார்கள். இந்தச் சம்மேளனத்தின் வாயிலாகவே உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் நிதிவசதிகள், அறிவுறுத்தல்கள், வேலைத்திட்டங்கள் என்பன சனசமூக நிலையங்களுக்கு எளிதான ஒழுங்கமைப்பின் மூலம் வழங்கப்பட்டு வந்தன.

நான் 1982இல் சர்வோதய இயக்கத்தின் பிரதம நூலகராகப் பணியாற்றிவந்தேன். சர்வோதய மத்திய நூலகம் புங்குடுதீவில் சர்வோதய வளாகத்தில் அமைந்திருந்தது. அக்காலகட்டத்தில்தான் வடமாகாண

*சர்வோதய இயக்கத்தினால் வடமாகாணத்தில் சமூகத்தொண்டில் ஆர்வம் கொண்டிருந்த 125 இளைஞர்களையும் யுவதிகளையும் ஒன்று திரட்டி பாரிய அளவில் சர்வோதய தலைமைத்துவப் பயிற்சி ஒன்றை ஒரு மாதம் தொடர்ந்து வழங்கியிருந்தோம். தேசிய மட்டத்தில் அறியப்பட்டிருந்த பல்வேறு சமூக சேவையாளர்கள், துறைசார் பிரமுகர்கள் என்று பங்குபற்றி பயிற்சிகளை வழங்கி வந்தார்கள். இந்நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கேற்றவர்கள் பெரும்பாலும் தத்தம் பிரதேசங்களில் சனசமூக நிலையச் செயற்பாடுகளில் ஆர்வம் காட்டியவர்களாகவே இருந்தார்கள். இவர்களுக்கான நூலகசேவைகள் பற்றிய பயிற்சியை அந்த பயிற்சி முகாமில் நான் வழங்கியிருந்தேன். அதன் காரணமாக யாழ் மாவட்டத்தின் சனசமூக நிலையங்களின் செயற்பாடுகள் பற்றிய புரிதலை என்னால் ஆழமாகவும் விரிவாகவும் பெற்றுக்கொள்ள முடிந்தது. சர்வோதய தலைமைத்துவப் பயிற்சியின் மூலம் பயன்பெற்றவர்கள் அந்த 125 இளைஞர்களும் மாத்திரமல்ல. கூடவே நானும்தான். சாதாரண நூலக நிர்வாகியாக தொழில்பார்த்த என்னை ஒரு சமூக நூலகனாக வாழ வழிகாட்டியதும் இந்தத் தலைமைத்துவப் பயிற்சிமுகாம் தான் என்றால் அது மிகையாகாது.*

*இந்த தலைமைத்துவப் பயிற்சியில் முக்கியமான ஒரு பாடத்திட்டம் "கிராமிய நூலகங்களை அமைத்துக்கொள்ளல்" என்பதாக அமைந்திருந்தது. அதில் பங்கேற்ற இளைஞர்களுக்கு கிராமிய நூலகம் என்ற கருப்பொருளை தெளிவாக உருவாக்கிக்கொடுத்தோம். இதில் பயிற்சி பெற்றோர் பெரும்பாலும் தமது கிராமங்களுக்குத் திரும்பிச் சென்றதும் தமது ஊரில் உள்ள சனசமூக நிலையங்களின் ஊடாக நூலகங்களை ஆர்வத்துடன் உருவாக்கத் தொடங்கினர் அல்லது இயங்கிவந்த நூலக சேவையை புனரமைப்புச் செய்யத் தொடங்கினர். அவர்களது இணைப்பாளராக நான் பணியாற்றிவந்தேன். துரதிர்ஷ்ட வசமாக 1983 ஜுலை இனக் கலவரத்துடன் வடமாகாண சர்வோதய அமைப்பு தாய்ச் சங்கத்திலிருந்து பிரிய நேர்ந்தது. அதன் விளைவாக நான் சர்வோதய அமைப்பின் முழுநேரப் பணியிலிருந்து விலகி யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலியில் அமைந்திருந்த ஈவ்லின் இரத்தினம் பல்லினப்பண்பாட்டு நிறுவனத்தின் நூலகராக இணைந்துகொள்ள நேர்ந்தது. இருப்பினும் சர்வோதயப் பணியின்போது எனக்குக் கிட்டியிருந்த எமது சமூகத்துடனான பிணைப்பிலிருந்து என்னால் விடுபட இன்றுவரை முடியவில்லை.*

*சர்வோதய இயக்கத்தின் முழுநேரப் பணியிலிருந்த வேளை, மில்க்வைற் தொழிலதிபர் அமரர் கனகராசாவுடன் தொடர்பிலிருந்தேன். அவரின் உதவியால் பல கிராம நூலகங்களுக்கு அன்பளிப்பாக நூல் களைப் பெற்றுக்கொடுக்க முடிந்தது. சனசமூக நிலையங்களுக்கான பல்வேறு காகிதாதிகளுக்கான அச்சக வேலைகளுக்கான நிதி வசதியையும் அவர் மூலம் பெற்றுக்கொடுக்க முடிந்தது. தனது ஆதரவிற்குப் பிரதி உபகாரமாக அவர் கேட்டது பொது வெளிகளில் சீண்டுவாரற்றிருந்த பனங்கொட்டைகளையும் வேப்பம் விதைகளையும் சேகரித்து அவரிடம் ஒப்படைப்பதே. சனசமூக நிலைய இளைஞர்கள், ஊர்ச்சிறுவர்கள் அதனை ஆவலுடன் சேகரித்துக் கொடுத்தார்கள். பயிற்சிக் கொப்பிகள், மரக்கன்றுகள் உள்ளிட்ட மேலும் பல அன்பளிப்புகளையும் அவர்கள் பிரதியுபகாரமாகப் பெற்றுக் கொண்டார்கள். அமரர் கனகராசாவின் பெறாமகனான தவகோபாலுடன் எனக்கு தொடர்பு ஏற்பட்டதும் சனசமூக நிலையங்களின் ஈடுபாடு காரணமாகவே. சனசமூக நிலையங்களுக்கான சம்மேளனத்தின் மூலம் கிராம நூலக உருவாக்கம் பற்றிய பயிற்சிநெறியொன்றினை உருவாக்கித் தரும்படி நண்பர் தவகோபால் வேண்டுகோள் விடுத்தார். அவர்தான் சம்மேளனத்தின் தலைவராக அப்போது இருந்தார்.*

*அவருடைய வேண்டுகோளை ஏற்று சனசமூகநிலைய சம்மேளன அங்கத்தவர்களுக்காக நான் உருவாக்கிய திட்டமே நூல் வங்கித் திட்டமாகும். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் (தற்போது எழுத்தாளர்களுக்கு தலா பத்தாயிரம் ரூபா வழங்குவது போல) அக்காலத்தில் ஒவ்வொரு சனசமூக நிலையத்திற்கும் அதன் அங்கத்தவர் எண்ணிக்கைக்கேற்ப ஆண்டுதோறும் 200 முதல் 500 ரூபா வரை நிதி வழங்குவதுண்டு. அந்நிதியை சனசமூக நிலையங்கள் பல்வேறு செலவினங்களுக்கும் பயன்படுத்தி வந்தன. நாம் ஆணையாளருடன் தொடர்புகொண்டு எமது நூல் வங்கித் திட்டத்தை விளக்கி, சனசமூக நிலையங்களுக்கென ஒதுக்கப்பட்ட குறித்த ஆண்டுக்குரிய நிதியை பயன்படுத்தி நூல் வங்கித் திட்டத்திற்கான நூல்கொள்வனவுக்குப் பயன்படுத்தினோம். எம்மால் 1500 தமிழ் நூல்கள் வரை அவ்வேளை கொள்வனவு செய்யக்கூடியதாக இருந்தது. இந்த நூல்களை மட்டைகட்டி சனசமூக நிலையங்களுக்கு நூலவங்கித் திட்டத்தினூடாக நீண்டகால கடன் திட்டத்தில் இரவல் வழங்கினோம். மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை அவர்கள் கொண்டுசென்ற நூல்களை மீண்டும் சம்மேளன அலுவலகத்திற்குக் கொண்டுவந்து ஒப்படைத்துவிட்டு வேறு ஒரு*

பெட்டி நூல்களை இரவலாக எடுத்துச் செல்ல வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தோம். இதன் மூலம் அன்று இணைப்பிலிருந்த 300க்கும் அதிகமான சனசமூக நிலையங்களும் நூல்களைப் பெற்று தமது அங்கத்தினரின் பாவனைக்கு அவற்றை தொடர்ச்சியாக வழங்க முடிந்தது. சுழற்சிமுறையில் பெறப்பட்ட புதிய நூல்கள் அவர்களுக்கு புதிய பல வாசகர்களையும் உள்வாங்கிக்கொள்ள வழியமைத்துக் கொடுத்தது. இந்நிலைமை, யாழ்ப்பாண மாவட்டத்தில் ஈழ விடுதலைப் போராட்டம் வலுவடையும் வரை நிகழ்ந்தது. சனசமூக நிலைய செயற்பாட்டாளர்கள் படிப்படியாக விடுதலை இயக்கங்களினால் உள்வாங்கப்பட்டதாலும், இளைஞர் ஒன்று கூடல்கள் பாதுகாப்புப் படைகளின் உயிரச்சுறுத்தல்களால் தடுக்கப்பட்டதாலும் நூல்வங்கித் திட்டம் படிப்படியாக செயலிழந்து போனது. அதனை மீள் எழுச்சி கொள்ளவைக்கும் தருணம் இதுவென்று கருதுகின்றேன்.

திரு. தவகோபால் மிக சிறந்த ஒரு நூலக சிந்தனை கொண்டவரும் அனுபவசாலியுமாவார். அவரை இன்றைய கிராம நூலக செயற் பாட்டாளர்கள் சந்தித்து அவரிடமிருந்து பயனைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இப்படியான பலர் இன்று சமூகத்திலிருந்து ஒதுங்கி வாழ்கின்றார்கள். பலர் பொது வாழ்விலிருந்தும் காணாமலே போய்விட்டனர்.

இன்றைய தலைமுறையினர் இந்த நூல்வங்கித் திட்டத்தினை புலம்பெயர்ந்த தமிழர்களின் நிதி வளத்துடன் மிக எளிதாக நடைமுறைப்படுத்தலாம்.

இதற்கு முதலில் கிராம நூலகங்களுக்கு இடையே ஒரு வலையமைப்பு உருவாக்கப்படவேண்டும். எல்லோரும் தனித்தனித் தீவுகளாக இருந்து நூலகங்கள் அமைப்பதை விடுத்து, கூட்டு முயற்சியுடன் பணியாற்றி மேலதிக பயன்களைப் பெறலாம். இது இன்றைய காலகட்டத்தில் ஒரு முக்கியமான தேவை என நான் கருதுகிறேன். நூலகம் என்ற பெயரில் ஒரு கட்டிடக் கனவுக்குள் எம்மைத் தொலைத்து விடக்கூடாது. கட்டிடம் இல்லாத நூலகங்கள் பற்றியும் நாம் சிந்திக்கவேண்டும். எமது அடிப்படை நோக்கம் நூல் வாசிப்பினை பரவலாக்குவதே. அதற்கான கட்டிடம் என்பது, எமது செயற்பாட்டை ஒழுங்குபடுத்த இலகுவாக அமையும் என்பதையும் மறுப்பதற்கில்லை.

இன்று எமது சமூகத்தில் இயங்கும் கோயில்கள் காலம்தோறும் புலம்பெயர் தமிழர்களின் எண்ணிலடங்காத நிதி வளத்துடன்

புனரமைக்கப்படுகின்றன. இவ்வாறு புனரமைக்கப்படும்போது, கோயிலையொட்டி ஒரு இளைஞர் மன்றத்தை கட்டும்படி வேண்டுமானால் வேண்டுகோள் விடுக்கலாம். அக்கட்டிடத்தில் கிராம நூலக சேவையினை மேற்கொள்ளலாம். யாழ்ப்பாண மாவட்டத்தில் பெரிய நூலக முன்னெடுப்புகளாக கட்டப்பட்ட பல கட்டிடங்கள் பின்னாளில் தேடுவாரற்றிருப்பதும், சில கட்டிடங்கள் நூலகம் என்ற பெயரில் தொடங்கப்பெற்று பாடசாலை வேலைத்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு நூலக செயற்பாடுகள் இரண்டாம் பட்சமாகுவதையும் நாம் அவதானித்து வருகின்றோம்.

அன்றைய காலகட்டத்தில் இந்திராகாந்தி இறந்த போது "அன்னை இந்திரா ஞாபகார்த்த நூலகம்" என பல நூலகங்கள் யாழ். மாவட்டத்தில் உருவாகியிருந்தன. அதேபோல் பேராசிரியர் கைலாசபதி இறந்தபோது "கைலாசபதி நினைவு நூலகம்" என புத்தூரில் ஒரு நூலகம் உருவாகியது. பின் பண்டிதமணி கணபதிப்பிள்ளை இறந்தபோது "பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஞாபகார்த்த நூலகம்" ஒன்று சாவகச்சேரியில் எழுந்து நின்றது. நல்லூரில் "ஞானப்பிரகாசர் நூலகம்" என ஒன்று உள்ளது. அதேபோல் 1985 ஆம் ஆண்டு தோன்றிய நூலகம் ஒன்று ஏழாலையில் "ஏழாலை சித்திவிநாயகர் சனசமூகநிலைய நூலகம்" என்ற பெயரில் இன்றும் இயங்குகிறது. இத்தகைய நூலகங்கள் இன்று எத்தகைய நிலைமையில் இருக்கின்றன என்பதை நாம் கவனிக்கவேண்டும். அவற்றை மீளெழுச்சிகொள்ளச் செய்யவேண்டும்.

இவ்வாறு அன்று இயங்கிய 300 சனசமூக நிலையங்களில் இன்று 30ஆவது தப்பிப்பிழைத்து இருக்கிறதா என்று கூட எனக்குத் தெரியாது. போர்க்கால அவதிகளில் மானிட வாழ்வியல் இருப்புக்கான போராட்டத்தில் சனசமூக நிலைய வேலைத்திட்டங்கள், நூலக வேலைத்திட்டங்கள் என்பன முக்கியத்துவத்தை இழந்து, முன்னுரிமையில் பின்தள்ளப்பட்டு மந்த நிலையை அடைந்தன. இப்போது மீண்டும் நூல் வாசிப்பு, நூல் வெளியீடு என பீனிக்ஸ் பறவைகளாக அங்காங்கே நம்மவர்கள் முகிழ்ந்தெழும் வேளையில் நாம் புத்திசாலித்தனமாக அதற்கான செயற்றிட்டங்களை உருவாக்கி அவற்றை முன்நோக்கி நகர்த்த வேண்டும். எமக்கான கிராம நூலகங்கள் பற்றிய அறிவை நாம் பரந்துபட்டதாகப் பார்க்க வேண்டும்.

முதலில் கட்டிடத்தைக் கட்டிவிட்டுப் பின்னர் புத்தகத்தைத் தேடி அடுக்குவதைவிட, அந்தக் கட்டிடம் கட்டும் போதே கொஞ்சம் காசை

ஒதுக்கிவைத்து, ஏன் புத்தகங்களை தேர்வுசெய்து பயனுள்ளவகையில் நூலகத்தைக் கட்டமைக்கக்கூடாது? புத்தகம் வாங்குவதில் அக்கறை இல்லாத ஒரு மனநிலையில்தான் இந்தக் கிராம நூலகங்கள் இயங்கப் போகின்றனவா? என்ற ஒரு கேள்வி வருகிறது. இதற்கு ஒரு வழி கண்டுபிடிக்கவேண்டும். ஒரு கிராம நூலகத்திற்குக் கட்டிடம் முதல் நிலையில் முக்கியம் அல்ல. அதன் தேர்ந்த சேகரிப்பே முக்கியம். கிராமநூலகத்தின் வளர்ச்சிக்கு ஒரு பௌதிக எல்லை உண்டு. ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் அதனால் வளரமுடியாது. அதனை அதன் எல்லைக்கு மேலாக விரிவாக்கம் செய்வதால் உள்ளிடப்படும் முதலிட்டுக்கான பயனை பெறமுடியாது போகலாம்.

வாசிகசாலைக்கும் கிராம நூலகங்களுக்கும் இடையே பாரிய வேறுபாடு உள்ளது. க.மு.செல்லப்பா 700 புத்தகங்களை சேகரிப்பதற்கு முன்னர் அவர் தனது வீட்டுக்கு முன் ஒரு கொட்டிலில் ஒரு வாசிகசாலையைத் தான் வைத்திருந்தார். இதில் படிப்படியாக திட்டமிட்டு வளர்த்தெடுக்கப்பட்ட புத்தகங்களையே பின்னர் அவரால் பராமரிக்க முடியாத நிலையில் யாழ்ப்பாண மாநகரசபைக்கு வழங்கினார். அதன் பின்னர் அந்த நூல் தொகுதி யாழ்ப்பாணப் பொது நூலகமாகப் பரிமாணம் பெறுகின்றது.

வாசிகசாலை என்பது எவ்வாறு உருவாக்கம் பெறுகின்றது? ஊரில் உள்ள பெரியவர் ஒருவர் ஒரு பத்திரிகையை வாங்கினால் அவர் அதை வாசித்துவிட்டு அதனை சனசமூக நிலையத்திற்குக் கொடுப்பார். அவரைப் போலவே மற்றும் சில பிரமுகர்களும் தாம் வாங்கும் பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் சமூகநோக்கம் கொண்டு பொது வாசிப்புக்கு வழங்குவர். அப்படித்தான் வாசிகசாலைகள் ஆரம்பத்தில் கிராமத்தின் பாரிய மரங்களின் கீழ் இயங்கின. காலக்கிரமத்தில் சனசமூக நிலைய கட்டிடங்கள் ஞாபகார்த்த கட்டிடங்களாகக் கட்டமைக்கப்பெற்றன. இதனால் சமூக வாசிப்பிற்கு களம் அமைத்துக் கொடுக்கப்பட்டன. மடங்கள், சுமைதாங்கிகள், ஆவுராய்ஞ்சிக் கற்கள், பேருந்து தரிப்பிடக் குடைகள், சனசமூக நிலையக் கட்டிடங்கள் என விரிவாக்கம் பெற்று இயங்கின. பின் வாசிகசாலைக்கு ஒரு பாதுகாப்பான அறையும் கிடைக்கப்பெற்று அது கிராம நூலகமாக மாறியது. இவ்வாறு கிராம நூலகத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டுதான் அதற்கு அடுத்ததாக பல காப்பக வேலைகளை படிப்படியாக கிராமநூலகச் செயற்பாட்டின் பின்னணியில் செய்யவேண்டியுள்ளது.

இன்று கொஞ்சம் கொஞ்சமாக வாசிப்பு பற்றிய சிந்தனைகள் எமது சமூகங்களில் முகிழ்க்க ஆரம்பித்துவிட்டன. உதாரணமாக யாழ்ப்பாணத்தில் சண்முகலிங்கம் சஜீவன் "புத்தகப் பண்பாட்டுப் பேரவை" என்ற பேரில் கிராமங்களுக்கு சைக்கிளில் புத்தகங்களைக் கொண்டு சென்று வாசிக்கக் கொடுத்து மீண்டும் அவற்றை எடுத்துக்கொண்டு வருகிறார். அதே போல் "சிறகுகள் அமையம்" பின்தங்கிய பாடசாலைகளுக்கு நூல்களை விநியோகித்து வருகிறது. "விதை குழுமம்" நூலகப் பண்பாட்டை வளர்த்தெடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

அண்மைக்கால கணனி, இணையப் பயன்பாட்டின் பெறுபேறாக வாசிப்புக் கலாச்சாரத்தில் இன்னொரு முன்னேற்றமும் காணப்படுகின்றது. பௌதிக உருவில் ஒரு நூலகம் இல்லாமல் வாசிப்புக் கலாச்சாரத்திற்கு பங்களிப்புச் செய்ய முடியும் என்பதை ஒரு சிறுமி செய்துகாட்டி வருகிறார். அக்சனா கம்லெட் என்ற சுண்டுக்குளி மாணவி தனது பெற்றோரின் உதவியுன் "குட்டி ஸ்ரோரிஸ்" என்று ஒரு இணையத்தளத்தையே நடத்தி வருகின்றார். தான் வாசிக்கும் ஆங்கில மொழியில் எழுதப்பட்ட சிறுவர் நூல்களை தமிழாக்கம் செய்து கார்ட்டூன் கலையைப் பயன்படுத்தி அதில் உள்ள படங்களையும் பயன்படுத்தி கதைசொல்கின்றார். இவை எல்லாம் வாசிப்பை ஊக்கப்படுத்துவதற்கான ஆரோக்கியமான சூழலை எம்மிடையே உருவாக்குகிறது.

கிராம நூலகங்களின் அடிக்கூறாக இவை இருக்கிறன. வாசிப்புத்தான் இங்கு முக்கியமான விடயம். எமது இன்றைய காலகட்டத்தின் முக்கிய நோக்கமும், செயற்பாடுகளும் "சிறுவர் வாசிப்பை" உயர்த்துவதையே பிரதான கருப்பொருளாகக் கொண்டுள்ளன.

கன்பூசியஸின் சீனப் பொன்மொழியை நீங்கள் அறிவீர்கள்.

"உனது திட்டம் அடுத்த ஒரு வருடத்துக்கானதாயின் நெல்லைப் பயிரிடு.

அதுவே அடுத்த பத்தாண்டுகளுக்கானதாயின் மரங்களை நட்டு வளர்.

அடுத்த நூறாண்டுக்கான திட்டம் வேண்டுமா? பிள்ளைகளுக்கான கல்வியறிவைக் கொடு."

எனது திட்டம் அடுத்த நூற்றாண்டுக்கானது. அதனைத்தான் இப்போது சிறுவர் நூலகங்களில் முதலிடுகின்றேன். இன்றைய

சிறுவர்களை நல்ல வாசகர்களாக்கினால், எதிர்காலத்தில் சிறந்த புத்திபூர்வமான பிரஜைகளை எமது மண்ணில் உருவாக்கலாம். ஏற்றத்தாழ்வு நிறைந்த சமநிலையற்ற எமது சமுதாயத்தினை புத்தகங்களால் சமநிலைப் படுத்தலாம் என்பது என் அசையாத நம்பிக்கையாகும். இன்றைய எமது சிறு முயற்சியால் நல்ல வாசகர்களாக உருவாகும் சிறார்கள் எதிர்காலத்தில் சமூகச் சிற்பிகளாகித் தாமே தம்மைச் செதுக்கிக்கொள்வார்கள்.

கிராமிய நூலகங்களின் முக்கிய தேவை என்பது தனித்தனி நூலகங்களாக வளர முனையும் கிராம நூலக சிந்தனையாளர்களை தனித்தனிய வளரவிடாது ஒருங்கிணைந்த ஒரு கூட்டுமுயற்சியாகக் கொண்டுவர வேண்டும் என்பதாகும். இந்த இணைவு எங்கே உருவாக வேண்டும் என்றால் உங்களுக்குப் பக்கத்தில் இருக்கும் பொது நூலகத்தில் இருந்தே அதனைத் தொடங்கலாம்.

எங்கள் பிரதேசத்தில் உள்ள பொதுநூலகம் சிறப்பாக இயங்கி கிராமங்களை எட்டவில்லை என்பதால் தானே நாங்கள் நாம் கிராம நூலகத்தை உருவாக்குகிறோம்? பிறகு எவ்வாறு நாம் பொது நூலகத்தைப் பயன்படுத்தவது என்று நீங்கள் யோசிக்கலாம். ஆனால் உண்மை அதுவல்ல. உங்கள் பிராந்தியத்தில் ஒரு பொது நுலகம் சிறப்பாக இயங்கவில்லையாயின் அதனை இயங்கவைக்கும் பொறுப்பு உங்களிடமே உள்ளது. நீங்கள் உறங்குநிலையில் உள்ள நூலகங்களுடன் அடிக்கடி தொடர்பாடலை மேற்கொண்டு நூலகசேவைகளை பெறமுயன்றாலே அங்குள்ள நூலக ஊழியர்கள் விழித்தெழுந்து விடுவார்கள். ஒரு சமூகத்தில் நூல்களை இரவல் கொடுப்பததற்கும் மீள அவற்றை வாங்கி பாதுகாப்பாக தட்டுகளில் அடுக்கி வைப்பதற்கும் அப்பால் தமக்கென்றொரு சமூக முக்கியத்துவம் இருக்கின்றதென்ற உணர்வினை வாசகர் தொடர்பாடலின் மூலம் அவர்கள் வளர்த்துக் கொள்வார்கள். எம்மூரில் உள்ள நூலகர்களை நாங்கள் மதித்து உறவாடுவதில்லை என்றதொரு ஆதங்கமும் நூலகர்களிடையே உண்டு. அடுத்த தடவை நீங்கள் இரவல் பெற்ற நூலை மீளளிக்கச் செல்லும்போது நீங்கள் நடந்துகொள்ளும் முறையை நிதானமாக அவதானித்துப் பாருங்கள். பொதுநூலகத்துக்கு விஜயம் செய்து நூலகரிடம் உங்களுக்கு வேண்டிய புத்தகங்களைப் பற்றி விசாரித்து அவர்களுடன் தொடர்பாடலில் ஈடுபடமுயற்சி செய்யுங்கள். பல்வேறு புத்தகங்களை அடிக்கடி அவரிடம் கேட்கும்போது, அண்மையில் வெளிவந்த புதிய நூல் பற்றிய தகவலை அவரிடம் தெரிவிக்கும்போது, அவரும் உங்களைத்

தவிர்க்கவியலாதவராகிவிடுவார். அவர் தனது மேலதிகாரிகளான பிரதேச சபையினரிடம் கேட்டு நீங்கள் கேட்கும் புத்தகங்களை வாங்கித்தர ஒருவேளை முயற்சிப்பார். இது நடைமுறையில் நடக்கும் ஒர சாதாரண விடயம் தான். நாங்கள் சமூக அக்கறையுடன் இருந்தால்தான் எமது சமூகத்தில் உள்ள நிறுவனங்கள் விழிப்புணர்வுடன் இருக்கும்.

கிராம நூலகங்களில், புத்தகங்களின் பயன்பாடு போலவே சஞ்சிகைகள், பத்திரிகைகளின் பயன்பாடும் முக்கியமானவை. பத்திரிகைகள், சஞ்சிகைகள் போன்ற பருவ வெளியீடுகள் வாசகர்களின் தொடர் வாசிப்புக்கான ஆர்வத்தை தூண்டுவனவாகும். அவற்றில் காணப்படும் தொடர்கதைகள், தொடர் கட்டுரைகள் என்பன அடுத்த சஞ்சிகையின் வருகைக்காக வாசகரை ஆவலுடன் எதிர்பார்த்திருக்க வைக்கும். எனவே நாம் உருவாக்க முயலும் கிராம நூலகங்களில் சஞ்சிகைகளுக்கும் சமமான இடத்தை ஒதுக்கிக் கொள்ளவேண்டும்.

கிராமநூலகங்களின் சிறப்பியல்பாவது, அந்தந்தக் கிராமங்களில் உள்ள பெரியார்களின் வாழ்க்கைக் குறிப்புக்கள், அவர்களது ஆக்கங்கள் அவற்றைச் சேகரித்துவைத்துப் பாதுகாப்பதில் தங்கியிருக்கின்றது. கிராமத்தின் கலை, இலக்கியப் பிரமுகர்களின் படைப்பாக்கங்கள் அல்லது அவர்களைப் பற்றிய ஆக்கங்கள், செய்திகள் என்பன வேறு எங்காவது வெளிவந்திருந்தால் அவற்றை தேடி எடுத்து நூலகத்தில் அவரது பெயரின் கீழ் அவற்றை சேகரித்து கோவைப்படுத்திப் பாதுகாத்து வைத்திருத்தல் வேண்டும். அதேபோல் அந்தக் கிராமத்தில் வாழும் முக்கியஸ்தர்கள் பற்றிய தகவல்களையும் விழிப்புடன் இருந்து தேடி வைக்கவேண்டும்.

கிராம நூலகச் சுற்றாடலில் உள்ள முக்கியஸ்தர்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்து வைத்திருத்தல் கிராம நூலகங்களின் பணிகளுள் ஒன்றாகும். குறிப்பாக அந்த ஊரில் ஒரு நாதஸ்வர வித்துவான் இருக்கிறார் என்றால் அவர் பற்றிய தகவல்களை நூலகத்தில் பேணி வைத்திருக்க வேண்டும். அவர் நிகழ்த்திய கச்சேரிகள், நிகழ்வுப் புகைப்படங்கள், அவர் பற்றிய செய்திகள், நிகழ்ச்சித் துண்டுப் பிரசுரங்கள், அவர் எழுதியுள்ள நூல்கள், அவரைப்பற்றி பிறர் எழுதிய நூல்கள், கட்டுரைகள் என அனைத்தும் சேகரிக்கப்பட்டு கோவைப்படுத்தப்படல் வேண்டும்.

நூலகவியல் துறையில் ஒரு புதிய சிந்தனை தற்போது உருவாகியிருக்கின்றது. "முப்பரிமாண நூலக சிந்தனை" அல்லது "மனித நூலகங்கள்" என இது அழைக்கப்படுகின்றது. லண்டனில் மாத்திரம் இவ்வாறான மனித நூலக சேவை வழங்கும் 40 சிறப்பு நூலகங்கள் வரை உள்ளன.

ஒரு நாள் பல்கலைக்கழகத்தில் தன் பட்டப்படிப்புக்கான ஆய்வினை மேற்கொள்ளும் ஒரு மாணவி நாதஸ்வர வித்துவான்கள் பற்றிய ஒரு ஆய்வினை மேற்கொள்ள நேருமிடத்து, குறித்த நாதஸ்வர வித்துவானின் ஊரை அறிந்து அங்குள்ள கிராம நூலகத்துக்கு தகவல் தேடி வரக்கூடும். அப்படியாக அணுகினால், அந்த ஆய்வாளருக்கு நூலகத்தின் தகவல் பதிவேட்டிலிருந்து தகவல் பெற்று குறித்த வித்துவானை சந்திப்பதற்கான ஒழுங்குகளை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் அவர் பற்றி தாம் சேகரித்து வைத்திருக்கும் தகவல்களையும் அவ்வாய்வாளருக்கு வழங்கி ஒரு முப்பரிமாண தகவல் வழங்குகையை மேற்கொள்ளலாம். அந்த ஆய்வாளர் கிராமத்துக்கு வந்து அவருடன் நேரடியாகக் கதைத்து அவரது அனுபவங்களை கேட்டறிந்து தனக்குத் தேவையான தகவல்களை எடுப்பது என்பது மிக முக்கியமானது. இதுதான் மனித நூலகங்கள் என்ற கருத்திட்டமாகும். இப்படியான வேலைத்திட்டங்களை இந்த கிராமநூலக வேலைத்திட்டங்களின் ஊடாக அண்மையில் உள்ள பொதுநூலகங்களுடன் இணைந்து மேற்கொள்ளலாம்.

அடுத்து அந்த கிராமத்தின் முக்கியமான இடங்கள் பற்றிய தகவல்களை சேகரித்துவைத்தல் கிராம நூலகங்களின் பணிகளில் ஒன்றாகும். எத்தனையோ புதுத் தகவல்கள் எல்லாம் எமது கிராமங்களைப் பற்றி இப்போது ஊடகங்களில் வருகின்றன. இதனை நீங்கள் ஆய்வுத் தேவையுடன் அணுக வேண்டும். நம்பகரமான தகவல்களையே தேடிப் பாதுகாக்கவேண்டும்.

சுவாரஸ்யத்திற்காக ஒன்று கூறுகிறேன். கந்தரோடை அகழ்வாராய்ச்சி பற்றி அமெரிக்கரான விமலா பேக்லி (Vimala S.Begley) என்பவர் கந்தரோடை பற்றி ஆராய்ச்சியை மேற்கொண்டிருந்தார். 1967இல் வெளியிட்ட அவரின் ஆராய்ச்சி முடிவுகள் அரசாங்கத்திற்கு சாதகமானதாக இருக்கவில்லை. அதனால் அதை தொடர்வதற்கு அரசாங்கம் சில இழுத்தடிப்புக்களைச் செய்தது. இதனால் இவர் ஆராய்ச்சி முடிவுகளையும், அதற்காக சேகரித்தவற்றையும் எடுத்துக்கொண்டு சிக்காக்கோ பல்கலைக்கழகத்திற்கு போய்விட்டார். அவர் தனது ஆய்வறிக்கையை அங்கு முடித்துவிட்டு. சிறிய கட்டுரை

ஒன்றினை அங்குள்ள ஆய்வுச் சஞ்சிகை ஒன்றிற்கு 1967இல் எழுதியிருந்தார். இந்த கட்டுரையை பிற்காலத்தில் பல உள்ளூர் ஆய்வாளர்கள் பயன்படுத்தியிருந்தார்கள். ஆனால் அது அவர் எழுதிய கட்டுரையே தவிர, முழு ஆய்வும் அல்ல. அந்த முழு ஆய்வும் சிக்காக்கோ பல்கலைக்கழக ஆவணக்காப்பகத்தின் ஒரு அறையில் ஒரு பெட்டிக்குள் அவரது பெயரில் இருக்கிறது. அதற்குள் அங்கு பெறப்பட்ட மட்பாண்ட ஓடுகள், கற்கள், சில மட்பாண்ட வரிவடிவ எழுத்துக்கள் என பாதுகாக்கப்பட்டு வருகின்றன. கந்தரோடைக் கிராமம் சார்ந்த இத்தகைய ஆதாரங்களைப் பற்றிய தகவல்களையாவது சுன்னாகம் பொது நூலகத்தில் சேகரித்து பாதுகாப்பதற்கு முயற்சிசெய்யவேண்டும். அவ்வாறே ஆனைக்கோட்டையில் கண்டெடுக்கப்பட்ட பெருங்கற் காலத்துக்குரிய 5000 ஆண்டுப் பழமையான முதுமக்கள் தாழி பற்றி ஆனைக்கோட்டை பொது நூலகமோ மானிப்பாய், உடுவில் பொது நூலகங்களோ தகவல்களை சேகரித்து வைத்திருக்கின்றனவா என்று அறிந்துகொள்ள வேண்டும். அதற்கான முன்னெடுப்புகளை அவர்கள் மேற்கொள்ள அவர்களைத் தூண்டுவதும் எமது பணியாகும். ஒரு தேசிய நூலகமோ சுவடிக்காப்பகமோ எதிர்காலத்தில் எமது மண்ணில் உருவாக்கவேண்டி வந்தால் இவை முக்கியமான சேர்க்கைகளாக அமையும் அல்லவா?

இறுதியாக இன்னொரு விடயம் பற்றியும் குறிப்பிட்டு எனது உரையை நிறைவுசெய்ய விரும்புகின்றேன். வட மாகாணத்தில் ஒவ்வொரு ஊரிலும் "சமயம் மற்றும் சமூகநல நிறுவனங்கள்" காலம்காலமாக இயங்கி வந்துள்ளன. அவற்றில் பல இன்று காணாமல் போய்விட்டன. அவை இயங்கியதற்கான ஆதாரங்கள் அந்த அமைப்புகள் சார்ந்த தனிநபர்களிடம் பாதுகாக்கப்பட்டு காலக்கிரமத்தில் அந்த நபர் மறையும்போது அந்த ஆவணங்களும் கவனிப்பாரற்று அடுத்த தலைமுறைக்குக் கடத்தப்படாமல் அழிந்துபோய் விடுகின்றன. நாமறிந்த வகையில் வட மாகாணத்தில் பல பதிப்பகங்கள் இயங்கிவந்துள்ளன. உதாரணமாக குரும்பசிட்டியில் "சன்மார்க்க சபை", "கூட்டுறவுப் பதிப்பகம்" என பல நிறுவனங்கள் இயங்கியுள்ளன. இவை பற்றிய ஆவணங்கள், அறிக்கைகள், பதிவேடுகள் எனப் பலவும் பாதுகாப்பின்றி அழிந்து போவதால் எதிர்காலத்தில் அந்த அமைப்புகளின் வரலாற்றுச் சுவடே இல்லாதொழிந்து விடுகின்றன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணப் பொது நூலகம் போன்ற நிறுவனங்கள் இவ்வமைப்புக்கள் சார்ந்த ஆவணங்களை சேகரித்துப் பேணிவரவேண்டும். அவற்றைத்

தேடிப்பெற்று அவர்களிடம் பாதுகாப்பாக ஒப்படைக்கும் பொறுப்பினை கிராம நூலகங்கள் ஏற்கவேண்டும். அத்தகைய அமைப்புகளின் முக்கிய உறுப்பினர்கள் மறைந்ததும் அவர்கள் பேணிப் பாதுகாத்து வந்த ஆவணங்களும் பேணப்படாமல் அழிந்துவிடுகின்றன. இதற்கு கிராம நூலகங்களின் கூட்டுறவும், தமது பிராந்தியத்திலுள்ள பிற பெரு நூலகங்களின் தொடர்பாடலும் முக்கியமானவை.

இதுவரை நான் உங்களுக்குக் கூறிய பல்வேறு விடயங்களிலிருந்து கிராமிய நூலகத்திட்டம் என்பது புத்தகங்களை வாசகருக்கு வழங்கி மீளவும் பெற்றுப் பாதுகாக்கும் நிறுவனங்கள் மாத்திரம் அல்ல எனவும், அதற்கும் மேலாக ஒரு கிராமத்தின் வாசிப்புக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் முன்னோடிப் பங்காளராகவும், வரலாற்றை ஆவணப்படுத்தும் அடிநிலை செயற்பாட்டாளர்களாகவும் இயங்கும் முக்கிய அமைப்பு என்பதையும் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும். இதன் செயற்பாடுகள் கூட்டுறவு முறையில் மற்றைய நூலகங்களுடன் இணைந்து இயங்கக்கூடியதாக ஒரு வலையமைப்பினை உருவாக்கு மிடத்து பிராந்திய ரீதியான நூலக, ஆவணவாக்கல் செயற்பாடுகள் எளிதாகும். கிராம நூலகங்களுக்கிடையேயான ஒழுங்குபடுத்தப்பட்ட தகவல் பரிமாற்றம் இங்கு முக்கியமானதாகும்.

உங்களுடன் உரையாடக் கிட்டிய இந்த வாய்ப்பைத் தந்தமைக்கு விதை குழுமத்தினருக்கு மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்

## உரையாடல்

*திரு.வேல்நந்தன்*
(விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)

*இந்த உரையாடல் எமக்கு புதிய நம்பிக்கையையும் வெளிச்சத்தையும் தந்திருக்கிறது. ஆனாலும் கூட இன்றைய சூழலிலே இலத்திரனியல் மூலமான வாசிப்பு பெருகியிருக்கின்ற வேளையிலே செல்வராஜா போன்றவர்கள் தங்களது அனுபவங்களின் வழி சொல்வது மகிழ்சியாக இருந்தாலும் கூட - நான் எதிர்மறையாகப் பேசுவதாக நினைக்கக் கூடாது, யதார்த்தம் என்பது எப்படியிருக்கிறது என்றால் சவால் உள்ளதாகத் தானிருக்கின்றது. ஒரு பக்கத்தில் நாங்கள் புதிய நூலகங்களை உருவாக்குவதைப் பற்றிப் பேசும் சம நேரத்திலே இன்னொரு பக்கத்தில் வாசிப்புப் பண்பாடு குறைந்து கொண்டு செல்கிறது. அதைப் பேண முடியவில்லை என்ற கவலைகளோடு, தற்போது நூலகங்களே தமது நூற்சேர்க்கைகளை விற்பனை செய்கின்ற நிலைமை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது.*

*ஒரு காலத்திலே நூலகங்களில் இரவல் வழங்கும் சேவையை பேணிய நூலகங்கள், இன்றைக்கு இரவல் வழங்கும் பகுதிகள் இல்லாமல் இருக்கின்றன. அதற்கு அவர்கள் சொல்கின்ற காரணம் என்னவென்றால் அதை இரவல் வாங்கி வாசிக்கும் பண்பாடு இல்லையெனும் போது இந்த நூல்களை எப்படி வைத்திருப்பது. இது ஒரு சுமையாக இருக்கிற போது நாங்கள் அதை விற்கிறோம். அதனை எல்லோருக்கும் என்று இல்லாமல் நூல்களைப் பேணக் கூடியவர்களுக்கு விற்கிறார்கள். நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க நூலகம் மிக முக்கியமானது. சிதம்பரப்பிள்ளை அய்யா அவர்கள் ஒவ்வொருவரிடமும் ஐம்பது பிரதிகள் வாங்கி வைத்து உயர்த்திய ஒரு நூலகம். ஆனால் இன்று அந்த நூலகத்தின் சேகரிப்பில் உள்ள பிரதிகள் கூட விற்கப்படும் நிலையில் உள்ளன. இது ஒரு நூலகத்தின் தோல்வியாக இருக்கலாமோ என எண்ணத் தோன்றுகிறது.* noolaham.org *போன்ற ஆவணப்படுத்தல் நிலையங்கள் கூட நாம் எல்லாவற்றையும் மெய்நிகர் ஆவணங்களாக ஆவணப்படுத்திவிட்டால் சரிதானே என்ற நிலையிலேயே இருக்கின்றன. அதே சமயம் மீளவும் கிராம நூலகங்களை உயிர்ப்போடு இயங்கச்செய்வதற்கும், எமது வாசிப்புப் பண்பாட்டிற்கும் இவைகூட தடையாக இருக்கிறதோ என்ற தோற்றப்பாடு எங்களது சூழலில் நிலவுகின்றது. இதனை நாங்கள் எவ்வாறு எதிர்கொள்வது?*

*நாங்கள் எல்லாம் அயலிலுள்ள கிராமத்து நூலகங்களில் வாசித்திருக்கிறோம். நீங்கள் சொல்வதை ஏற்றுக் கொள்கிறோம்.*

ஆனால் எங்களைத் தாண்டியிருக்கிற இந்தப் புதிய தலைமுறையை உள்ளே கொண்டு வருவதென்பதும் அவர்களுடைய வாசிப்புச் சூழலிலே ஏற்பட்டிருக்கிற மாற்றங்கள் என்பதும் நீங்கள் சொல்கின்ற விடயங்களின் மீது ஒரு கடினத் தன்மையை ஏற்படுத்திவிடக் கூடும். சுவடிக் காப்பகங்களாக நாங்கள் அவற்றைப் பயன்படுத்திக் கொண்டாலும் கூட நடைமுறை யதார்த்தத்திலே இப்படியொரு நிலை இருக்கிற போது எப்படி நாங்கள் தடுத்து நிறுத்த முடியும்? ஏனென்றால் நானும் ஒரு காலத்தில் நூலகங்களை உருவாக்கியவன், நானும் ஒரு வாசிகசாலையின் செயலாளர். இப்போது, நாவலர், கதிரவேற்பிள்ளை அவர்களின் பெயர்களில் எல்லாம் நூலகங்கள் இருக்கின்றன. ஒரு காலத்திலே அவர்கள் இதையெல்லாம் உருவாக்குகிற போது அதிர்ஷ்ட லாபச் சீட்டுப் போட்டு, திரைப்படங்களைத் திரையிட்டெல்லாம் காசு சேர்த்து நூலகங்களை உருவாக்கினார்கள். எங்களது கோப்பாய் ஆசிரியர் கலாசாலையிலே கிருஷ்ணையர் படிப்பகம் என்ற நூலகம் இருக்கிறது. அந்தப் படிப்பகத்தின் உருவாக்க வரலாற்றைப் பார்த்தால் நாடகங்கள் நடாத்தி அதன் மூலம் நூலகங்களை உருவாக்கிய வரலாறு உண்டு. ஆயினும் நம் முன்னுள்ள இந்த சவாலை எப்படி எதிர்கொள்வது? என்பது எனது கேள்வி.

அண்மையிலே திரு.என் செல்வராஜா அவர்கள் சிங்களப் பிரதேசங்களுக்கும் நிறைய நூல்களை வழங்கியிருக்கிறார், அந்த சமூகத்தாலும் போற்றப்படுபவராக இருக்கிறார் என நான் கேள்விப் பட்டேன்.

நன்றி

கலாநிதி. திருமதி.கல்பனா சந்திரசேகர்
(பதில் நூலகர்,யாழ் பல்கலைக்கழகம்)

நான் இங்கு ஒரு விடயத்தைப் பதிவு செய்ய விரும்புகிறேன். 2012-2013 காலப்பகுதியில் நான் ஒரு ஆய்வை மேற்கொண்டிருந்தேன். அவ்வாய்வு யாழ்ப்பாணப் பிரதேசத்திலுள்ள பொது சன நூலகங்கள் பற்றியது. அவற்றின் நிலை எப்படியிருக்கிறது என்பது தொடர்பில் அவ்வாய்வு அமைந்திருந்தது. அந்த காலப்பகுதியில் உள்ளூராட்சி சபைகளினால் இயக்கப்படுகின்ற நூலகங்களுக்கு மேலதிகமாக சனசமூக நிலையங்களால் இயக்கப்படுகின்ற நூலகங்களைப் பற்றியும் எனது ஆய்வில் குறிப்பிட்டிருந்தேன். நான் அந்த ஆய்வைச் செய்த வேளை

60 பொதுசன நூலகங்கள் யாழ் மாவட்டத்தில் இயங்கிக் கொண்டிருந்தன. அதே சமயம் 907 பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்கள் இருந்தன. ஆனால் 2013 ஆம் ஆண்டில் இவற்றுள் 80 சனசமூக நிலையங்களில் தான் நூலகங்கள் இயங்கு நிலையில் காணப்பட்டன. அதிலும் பெரும்பாலான நூலகங்கள் பத்திரிகைகளை மட்டும் கொண்ட வாசிகசாலைகளாகவே இயங்கின. இது தொடர்பில் சனசமூக நிலைய அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடலொன்றை மேற்கொண்டிருந்தேன். அவர்கள் பின்வரும் விடயங்களை சுட்டிக்காட்டி இருந்தார்கள். புத்தகங்கள் இருந்திருந்தாலும் கூட நாட்டின் சூழ்நிலையால் தற்போது இல்லாமல் போய் விட்டது. அதனால் அவற்றை இயக்க முடியாமல் இருக்கிறது. மேலும், நிதி அனுசரணை வரும்போது அப்பிரதேச மக்களின் வேறு தேவைகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டி யிருப்பதாகவும் அவற்றுக்கு அந்த நிதியைப் பயன்படுத்துவதாகவும் அதனால் தங்களால் இந்த நூலகங்களைச் சரியாக நிர்வகிக்க முடியவில்லை எனவும் குறிப்பிட்டிருந்தனர். எனினும், திரு.என். செல்வராஜா அவர்கள் தமது நூலொன்றில் யாழ்ப்பாணப் பிரதேசத்தில், எண்பதுகளில் 375 சனசமூக நூலகங்கள் இயங்கிக் கொண்டிருந்திருந்த தாகக் குறிப்பிட்டிருந்தார் ஆனால், 2013இல் அதில் எண்பது நூலகங்கள் தான் இயங்கு நிலையில் காணப்பட்டன என்பதை இங்கு பதிவு செய்து கொண்டு, இன்னொரு விடயத்தையும் பதிவு செய்யலாம் என்று நினைக்கிறேன். எங்கள் பகுதிகளில் தற்போது தனியார் நூலகங்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு செல்கிறது. ஒவ்வொரு சின்னச் சின்ன ஊர்களிலும், புலம்பெயர்ந்து இருப்பவர்களின் முயற்சி மற்றும் நிதி அனுசரணையில் திரு.என்.செல்வராஜா அவர்கள் குறிப்பிடும் கிராமிய எண்ணக்கருவின் அடிப்படைகளில் நூலகங்களை தொடங்குகிறார்கள். நல்ல கட்டடம், புத்தகங்கள் வாங்க நிதி போன்றவை அவர்களிடமிருக்கு. ஆனால் அவற்றைக் கொண்டு நடாத்த நூலகம் தொடர்பான அறிவுடைய ஆட்கள் அங்கு இல்லை. நூலக விஞ்ஞானம் படிக்கும் மாணவர்களை உள்வாங்கி, அவர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கான ஏற்பாடுகளும் போதியளவில் காணப்படுவதில்லை. கட்டடம், நூல்கள் போன்றே நூலகத்தை நிர்வகிக்கும் அறிவுடையவர்களுக்கும் நிதி ஒதுக்கி வேலைக்கமர்த்தி இத்தகைய தனியார் நூலகங்கள் இயங்க வேண்டும். அப்படிச் செய்தால் தான் அதன் நீண்ட காலப் பயன்பாட்டை நாம் உறுதி செய்யலாம்.

## திரு.ச.சத்தியதேவன்
(தேசிய கலை இலக்கிய பேரவை)

*பயனுள்ள உரைகள். நூலியலாளர் திரு.என்.செல்வராஜா அவர்களின் சிந்தனை, அதற்குப் பிறகு வேல் நந்தன் அவர்கள் கேட்ட கேள்வி. நூலியலாளர் திரு.என்.செல்வராஜா குறிப்பிடுவது போல கிராம நூலகங்கள் ஒட்டுமொத்தமாய் சேர்ந்து ஒருங்கிணைந்து செயற்படுவது ஏன் முக்கியமானது எனில் அது கிராமிய நூலகங்கள், சனசமூக நிலையங்களுக்கு இருக்கின்ற சமூகத் தடை என்ற ஒன்றை மாற்றுவதற்கான வாய்ப்பை அளிக்கிறது. எனது தனிப்பட்ட அனுபவத்தில் எல்லாக் கிராமங்களிலும் நூலகங்கள், சனசமூக நிலையங்கள் இருக்கின்றன. ஆனால் அவற்றையெல்லாம் ஒன்றுடன் ஒன்று சேர முடியாவாறு ஏற்றத் தாழ்வான சமூக அடுக்கமைவு தாக்கம் செலுத்திக் கொண்டிருக்கிறது. அதை மாற்றுவதற்காக திரு.என். செல்வராஜா அவர்கள் முவைத்த வரைவு முக்கியமானது. அயலில் இருக்கக் கூடிய எல்லாக் கிராம நூலகங்களும் சேர்ந்து செயற்படக் கூடியதான வாய்ப்பு சமூக அபிவிருத்தி, சமூக சமத்துவம் போன்றவற்றுக்குப் பங்களிப்புச் செய்யும் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.*

*நூலியலாளர் என்று அவரைக் குறிப்பிட்டதற்கான காரணமே அதுதான். ஒருவர் நூலகராக மட்டும் இன்றைக்கு இருக்கும் இலத்திரனியல் சூழலில் புத்தகப் பண்பாட்டை, வாசிப்பை ஏற்படுத்தி விட முடியாது. நூலியல் ஆர்வலராக அவ்விடயங்களுடன் இணைந்து செல்லும்போது மட்டும்தான் அது சாத்தியமாகும். உண்மையில் நூலியலாளார் திரு.என்.செல்வராஜா அதற்கான முன்வழியைத் தான் காட்டியிருக்கிறார். வெறுமனவே நூலகராக, வெறுமனவே வாசகராக இல்லாமல், நூல் சம்பந்தப்பட்ட எல்லா விடயங்களுடனும் ஆர்வம் கொண்டவர்களாக மாறுவதன் ஊடாக கிராமிய நூலகங்களில் நிர்வாக உறுப்பினர்கள், அல்லது செயற்படுத்துனர்கள் இது போன்ற விடயங்களை மேலும் மேலும் முன்னகர்த்தலாம். அவருடைய புத்தகங்களில் அழகாகக் கூறுவார், கிராமிய நூலகங்களின்பால் விரிந்த தன்மை மற்றும் தேவை பற்றிய பார்வைகளை நாம் செலுத்த வேண்டும். எங்களுக்குத் தெரிந்த அல்லது சார்பான நூல்களை மட்டும் வாங்கிச் சேர்க்குமிடமல்ல நூலகம். மற்றையது நூலகத்தை இயக்குகிற அல்லது சேர்ந்து செயற்படுகின்ற ஆட்களும் நூலியல் ஆர்வமுடையவர்களாக அது தொடர்பிலான எல்லா விடயங்களிலும் பங்கெடுத்து செயற்படுவதன் மூலமே வாசிப்புப் பண்பாட்டை கட்டியெழுப்ப முடியும். அப்படியொரு*

வாசிப்புப் பண்பாட்டை கட்டியமைப்பதற்கான தொடக்கத்தையும் அடிப்படைகளையுமே அவரது நூல்களிலும் உரையாடல்களிலும் முன்வைக்கிறார்.

கட்டடங்கள், சனசமூக நிலையங்கள் இல்லாமலேயே கிராமிய நூலகத்திற்கான வாசிப்புப் பண்பாட்டுக்கான வாய்ப்பை உருவாக்க முடியும். அதனை ஒரு நூலகம் என்பதைத் தாண்டி சமூக முன்னேற்றத்திற்குரிய பல வேலைகளைச் செய்யக் கூடிய இடம் என்ற நிலைக்கு எடுத்துச் சென்று புத்தகத்தோடு சம்பந்தப்பட்ட எல்லா விடயங்களிலும் அதனுடன் சம்பந்தப்பட்டவர்கள் ஈடுபட்டால் இது போன்ற சிக்கல்கள் வரும்போது அதைக் கையாள்வதற்கான திறன்களை கண்டறியலாம். இது தொடர்பில் நூலியலாளர் என்.செல்வராஜா விடமிருந்து நான் மேலும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் அவர் குறிப்பிட்ட கிராம நூலகங்களின் சமாசத்தையோ அல்லது சம்மேளனத்தையோ நான் முக்கியமானதாகப் பார்க்கிறேன். இங்குள்ள எல்லாக் கிராமங்களும் கிராமிய நூலகங்களும் தனித்த ஒரு குழுமத்திற்கானதாகவோ அல்லது சமூகத்திற்கானதாகவோ பிரிந்து போய் இருக்கின்றன. இவர்கள் அங்கு சென்று பயன்படுத்த முடியாது. அவர்கள் இங்கு வந்து பயன்படுத்த முடியாது. அந்தப் பாகுபாடுகளும் புறக்கணிப்புக்களும் இந்த நூலகங்கள் வெற்றிகரமானதாக இயங்க முடியாமைக்கான காரணங்களில் ஒன்றாக அமைகிறது. புதிய நூலகங்களை உருவாக்க வேண்டிய தேவையும் அப்படியே உருவாகின்றது. அதற்கு திரு.என்.செல்வராஜா முன் வைத்த முன்வைப்பு மிகவும் ஆரோக்கியமானதும் நடைமுறை சாத்தியமானதுமாகும். புத்தகங்களை வாசித்தும் நேசித்தும் அதன்வழி நூலகத்தை உருவாக்கத் தொடங்குகிற ஆட்களிடம் அவசியம் இருக்க வேண்டியது சமூக நீதி சார்ந்த கருத்துக்களே. இதுவே ஒரு கூட்டிணைவை சமூகத்தில் உருவாக்க துணைநிற்கும் என்று நம்புகிறேன்.

திரு.என்.செல்வராஜா
(நூலியலாளர்)

வேல்நந்தன் கேட்ட கேள்வி நல்ல கேள்வி. மற்றையவர்கள் சொன்னவை அவரவர் கருத்துக்கள். ஆகவே அவரது கேள்விக்கு முதலில் பதிலளிக்கிறேன். நூலகங்கள் இயங்க முடியாமல் புத்தகங்களை விற்கின்றன என வேல்நந்தன் குறிப்பிட்டார். உண்மையில் நீங்கள் ஆழமாகப் பார்த்தீர்கள் என்றால் நூலகங்கள் புத்தகங்களை விற்பது என்பது இன்று நேற்று நடக்கும் விடயமல்ல. அநேக தனிப்பட்ட

நபர்கள் மற்றும் நிறுவனங்களுடைய நூலகங்கள் அவை தொடர்ந்து இயங்கமுடியாமல் போகும் பொழுது அவர்களுக்கு அவற்றை பிறருக்கு வழங்குவதைத் தவிர வேறு தெரிவுகள் இல்லை. ஆகவே அவர்கள் விற்கும் பொழுது அவை அழியவில்லை. கைமாற்றப்படுகின்றன. அவை என்ன மீட்கமுடியாத குப்பைமேட்டுக்குள்ளா செல்கின்றன? அந்தப் புத்தகங்களை இன்னொரு நூலகம் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளை இப்பொழுது வழங்குகின்றனர். ஆகவே புத்தகங்கள் ஒரு நிறுவனத்திலிருந்து இன்னொரு நிறுவனத்திற்கு பரிமாறப்படுகிறது என்பதை நாம் கவனிக்கவேண்டும். அதை ஒரு குறையாகவோ அல்லது எதிர்மறையாகவோ கருத வேண்டியதில்லை. நாங்களும் கூட எத்தனையோ பேரினது புத்தகங்களை விலை கொடுத்து வாங்கினோம். குடும்ப நூலகங்கள் பலவற்றை வாங்கியிருக்கிறோம். ஆகவே அது ஒரு விவாதத்திற்குரிய பொருளல்ல.

ஆனால் இன்னொரு முக்கியமான விடயம். இந்த வாசிப்பு கலாசாரம் குறைகின்றது குறைகின்றது என்பதை தமிழர்களிடம் மட்டும் தான் அடிக்கடி கேள்விப்படுகிறேன். அதன் உளவியல் எனக்கு விளங்கவில்லை. உண்மையில் நீங்கள் வாசிப்பு குறைகின்றதென்பதை நிரூபிப்பதற்கான எவ்வகையான ஆதாரங்களை வைத்திருக்கிறீர்கள்? எனக்கு நீங்கள் ஒரு புள்ளி விபரத்தை தாருங்கள். அதன் பின்னர் அதற்கான விஞ்ஞானபூர்வமான அணுகுமுறையொன்றின் மூலம் ஏன் வாசிப்புக் கலாச்சாரம் குறைந்து செல்கின்றது என்பதை ஆராய்வோம். நாங்கள் லண்டனில் முன்னர் ஒரு அறிவியல் கூட்டம் ஒன்று நடத்தினோம். அதில் மேடையில் ஒருவர் உணர்ச்சிபொங்க கண்ணில் நீர் மல்க வாசிப்புக் கலாச்சாரம் இளையோரிடையே தொலைந்து விட்டதென்றார். "ஐயோ எங்கட பிள்ளைகளினுடைய வாசிப்புக் கலாசாரம் குறைந்து போய்விட்டதென்று" பிரலாபித்தார். அவருக்குப் பின்னர் நான் உரையாற்ற வாய்ப்புக் கிட்டியபோது மேடையில் இருந்த அவரிடம் நேரில் கேட்டேன் "வாசிப்புக் கலாசாரம் குறைந்திருக்கிற தென்று உங்களால் நிரூபிக்க முடியுமா? என்னைப் பொறுத்த வரையில் இன்று இந்த நிகழ்ச்சியில் இங்கே கலந்து கொண்டிருக்கிற எத்தனை பேர் உங்கள் பிள்ளைகள் ஹரிபொட்டர் போன்ற தடித்த ஆங்கில நூல்களை வாசித்துக்கொண்டிருப்பதை காண்கிறீர்கள். வாசிப்பக் கலாச்சாரம் குறைந்ததென்றால், நீங்களெல்லோரும் வாசிப்புக் கலாசாரத்தை கைவிட்டு அந்நியமாவா இருக்கிறீர்கள்? இல்லையே" என்றேன்.

இன்றைய zoom அரங்கில் "எங்கட புத்தகங்கள்" நண்பர் வசீகரன் குலசிங்கம் இங்கு இருக்கிறார். இம்முறை "எங்கட புத்தகங்கள்" புத்தகக்

கண்காட்சியில் எத்தனை புத்தகங்கள் விற்கப்பட்டன என்பதை நானும் அதனோடு சம்பந்தப்பட்டவன் என்ற வகையில் அறிந்து மகிழ்ந்தேன். அந்த அடைமழை வெள்ளத்திற்குள்ளும் கண்காட்சிக்குத் திரண்டு வருகை தந்த எவரும் புத்தகம் வாங்காமல் போகவில்லையே. அவர்கள் வாங்குகின்றார்கள் வாசிக்கின்றார்கள். இங்கு வாசிப்புக் கலாச்சாரம் குறையவில்லை என்பதை நிரூபிக்க ஒன்றை கவனியுங்கள். 1980 ஆம் ஆண்டுகளில் இலங்கையில் வெளியாகிய புத்தகங்களின் எண்ணிக்கையை விட 2020 ஆண்டு பல மடங்கு புத்தகங்கள் அதிகமாக வெளியிடப்படுகின்றன. நூல் வெளியீட்டுத்துறை வளர்ச்சிகண்டிருக்கிறது. நூல்தேட்டத்தைப் பார்த்தீர்களானால் கடந்த 20 ஆண்டு நூல் வளர்ச்சியை இதுவரை வந்திருக்கும் 15 தொகுதிகளும் தெளிவான புள்ளிவிபரத்தைத் தரும். ஆதாரபூர்வமான விபரங்களை அது தரும். இன்று புத்தகம் வெளியிடும் அனைவரும் தங்கள் நூலை வாசிப்பதற்கு ஒருவரும் இல்லை என்றா நினைத்துக்கொண்டு முதலிடுகிறார்கள். வாசிக்க ஆட்கள் இல்லையெனில், ஏன் இவ்வளவு பணத்தை அவர்கள் செலவிட்டு புத்தகங்களை வெளியிடுகிறார்கள்? அண்மையில் குமரன் பதிப்பகத்திடம் கேட்டேன். ஒவ்வொரு மாதமும் சராசரியாக இருபது புத்தகங்கள் வரை அவர்கள் அச்சிடுகிறார்கள் என்றறிந்தேன். மற்றைய பதிப்பகங்களிலும் இதே நிலைதான். வாசிப்புக் கலாசாரம் குறைந்து போய்விட்டது என நாங்கள் தவாறானதொரு எண்ணக்கருவை தலைக்குள் வைத்திருக்கின்றோம். இப்பொழுது தான் காத்திரமான நூல் விமர்சனங்கள், இலக்கிய விமர்சனங்கள் முகநூல்களிலும், விமர்சன அரங்குகளிலும் தனிப்பட்ட இணையப் பக்கங்களிலும் வெளியிடப்படுகின்றன. இவையெல்லாம் வாசிப்புக்கலாச்சாரம் அழியவில்லை என்பதற்கு எடுத்துக்காட்டுகள். எம்மவருக்கு ஒரு உளவியல்சார் குறைபாடுண்டு. இணையத்தளம் வந்ததும் அச்சிட்ட புத்தகங்கள் வருவது படிப்படியாக நின்றுவிடும். சின்னச் சின்ன விசயங்களை சுவாரஸ்யமாக வாசிப்பதில்தான் அவர்களது நாட்டம் சென்றுவிடும். அதனால் இனி பிள்ளைகள் வாசிப்பதில் ஆர்வம் இராது என்று உளவியல்ரீதியாக அவர்கள் நம்பினார்கள். அந்தத் தவறான நம்பிக்கையை எம்மில் பலர் சிந்திக்காமலே ஏற்றுக்கொண்டு விட்டார்கள். அது தான் காரணம். உங்களுக்கு மேலும் ஒரு சுவாரஸ்யமான கதையைச் சொல்கிறேன். வடபகுதிக்கு ரயில் தண்டவாளம் போடப்பட்ட காலத்தில் அதை எதிர்த்தவர்கள், ரயில் ஓடத் தொடங்கியதும் ரயில் வந்ததால் அந்த இரைச்சல் காரணமாக தம் வீட்டுக் கோழிகள் முட்டை போடுவதில்லை என்று நட்டஈடு கோரி யாழ்ப்பாணக் கோர்ட்டில் வழக்கே போட்டார்கள். இதனை

பழைய சத்தியவேத பாதுகாவலன் பத்திரிகைகளில் நீங்கள் இன்றும் காணலாம். பின்னாளில் இணையம் வந்தவுடன் வாசிப்பை மறந்து பிள்ளைகள் அதனுள் போய்விடுகிறார்கள். புத்தகம் வாசிப்பதில்லை என்றதொரு தவறான கருத்தும் இவ்வாறே பிறந்தது. இலங்கையை விட வாசிப்புக்கலாச்சாரத்தில்உயர் நிலையில் இருக்கும் பிரித்தானியாவில் கூட ஒரு காலத்தில் பயந்தார்கள். அச்சுத் தொழில் இல்லாமல் போய்விடும். சிறு சஞ்சிகைகள் அழிந்துவிடும் என்றார்கள். ஆனால் எம்மைப்போல அல்லாது அவர்கள் விரைவிலேயே தாம் தவறாகக் கணித்துவிட்டதாக சுதாரித்துக் கொண்டார்கள். இணையத்தில் சிறிது நேரம் எமது பிள்ளைகள் உலாவுவதால் அவர்கள் வாசிப்பதே இல்லை எனக் கூறிவிடமுடியாது. அளவுக்கு மிஞ்சினால் தான் அமுதமும் விஷமாகிவிடும்.

உண்மையில் ஆழமாகப் பார்த்தீர்களானால், இந்த டிஜிட்டல் புத்தகங்களை வாசிப்பதும் கையிலெடுத்து வாசிப்பதும் வேறுவேறல்ல. எல்லாம் வாசிப்புத்தான். ஆங்கிலப் புத்தகத்தை வாசிப்பதற்கும் தமிழ்ப் புத்தகத்தை வாசிப்பதற்கும் வேறுபாடில்லை. அதுவும் வாசிப்புத்தான். ஆனால் இவற்றுள் நாங்கள் பார்க்க விரும்பாதது எதுவென்றால் எங்களின் பிள்ளைகளுக்கு வாசிப்பை ஊக்குவிப்பதற்கான முயற்சிகளை முறையாகச் செய்யவில்லையே என்ற குற்றவுணர்வால் தான் பெரியவர்கள், இளையவர்களிடம் வாசிப்பு கலாசாரம் குறைந்து விட்டது என்று தற்காப்புப் பொறிமுறையை பயன்படுத்துகின்றார்கள். அது ஒரு உளவியல் ரீதியிலான பிரச்சினை என்பதே எனது வாதம். இது தனியே திரு. வேல்நந்தனுக்குரிய பதில் அல்ல. வாசிப்புக் கலாச்சாரம் குறைந்துவிட்டது என்று நம்பும் அனைவருக்கும் உரியது.

இப்படியே நாங்கள் சொல்லிக் கொண்டிருக்கின்றதால் எங்களையே நாங்கள் சோர்வாக்கிக் கொள்கின்றோம். அது கூடாது. அதுதான் நான் என்னுடைய இவ்வளவு கால வாழ்விலும் செய்து கொண்டு வருகிற விடயம். வாசிப்புக் கலாச்சாரத்தை இளையோரிடையே வளர்த்தெடுக்க ஆயிரக்கணக்கில் சிறுவர் நூல்களை வருடாந்தம் ஸ்கொட்லாந்திலிருந்து வட கிழக்கு, மலையகப் பிரதேசங்களுக்கு அனுப்பிவருகின்றேன். சிறுவர் நூலகங்கள், கிராம நூலகங்கள், வாசகர் வட்டங்கள் என முடிந்தவரை அவர்களின் வாசிப்புக்கென நூல்களை பெற்றுக் கொடுத்து வருகின்றேன். எம்மிடையே வாசிப்புக் கலாசாரத்தை வளர்த்துச்செல்ல தனிப்பட்ட முறையில் நாங்கள் ஒவ்வொருவரும் என்ன செய்தோம் என்று தத்தமது மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் பட்டியலிட்டுப் பாருங்கள்.

*இரண்டாவதாக டிஜிட்டல் நூலகத்தைப் பற்றிச் சொன்னார்கள். ஈழத்து நூல்கள் அனைத்தையும் டிஜிட்டல் நூலகமாக்குவதில் எங்களுக்கொரு பிரச்சினை உள்ளது.* copy right act *என ஒன்றுள்ளது. புலமைச் சொத்து சட்டம் என்று ஒன்றுள்ளது. அந்தச் சட்டத்தின் படி ஒரு நூலகத்தில் உள்ள நூலொன்றை ஆய்வுத் தேவைக்காக, 10% இற்கு மேல் பிரதியெடுக்க அனுமதிப்பதில்லை. ஒருவர் பாரிய நிதியை செலவிட்டு ஒரு புத்தகத்தை வெளியிட்டால் அதை பிரதி பண்ணி டிஜிட்டலில் எல்லோருக்கும் இலவசம் என்று மற்றொருவர் பகிர்ந்தால், எழுதியவரின் பொருளாதாரம் என்னாகும்? அந்நூலின் பதிப்பாளரின் பொருளாதாரம் என்னாகும்? ஆகவே தான் அரசால் பதிப்புரிமைச் சட்டத்தின் கீழ் அந்த நூலாசிரியருக்கு சட்டப் பாதுகாப்பு வழங்கப் படுகிறது. அதுவும் அவர் மறைந்து 70 ஆண்டுகள் வரையிலும் அந்தப் பாதுகாப்பு அவ்வெழுத்தாளருக்கும் அவரது வாரிசுகளுக்கும் வழங்கப்படுகின்றது.*

*இன்றைய டிஜிட்டல் யுகத்தில் பொது நூலகங்கள் தேவையில்லை என்று என்றுமே ஆகமாட்டாது. டிஜிட்டலாய் இருக்கும் எமது எண்ணிம நூலகத்திற்குப் பெயரும் நூலகம்*.org *தான். நூலகமென்பது வடிவத்தில் வேறானதாய் இருக்கும்- அவ்வளவே. ஆசிரியரின் அனுமதி பெற்று வெளிவந்த புத்தகங்களைத் தான் அதில் ஆவணப்படுத்துகிறார்கள். ஆசிரியர் அனுமதி பெறப்படாதவையும் பல அதில் இருக்கின்றன. ஆனால் அதனை வாசகர் பார்வையிட முடியாது. அந்த நூல் அழிந்துவிடாமல் பாதுகாப்பதற்காக மின்வருடல் செய்து ஆவணப்படுத்தி வைக்கிறார்கள். எழுத்தாளர் அல்லது அவரது வாரிசுகள் எழுத்துமூலம் கேட்டுக்கொண்டால் மட்டுமே அதனை பொதுப் பாவனைக்கு நிர்வாகிகள் விடுகிறார்கள்.*

*ஆனால் என்னதான் டிஜிட்டல் நூலகங்கள் இருந்தாலும், நாம் வாழ்கின்ற மிக நவீனத்துவமான பிரித்தானிய நாட்டில் நூலகங்கள் மூடுப்படவில்லை. இன்றைக்கும் இயங்குகின்றன. டிஜிட்டல் நூலகமும் இருக்கின்றது. நூலகத்திற்குள்ளேயே இருந்து டிஜிட்டல் நூலக புத்தகத்தை ஒருவர் பலத்த கட்டுப்பாடுகளுக்கு இணங்கி வாசிக்கலாம். இங்கே அச்சுப் புத்தகங்கள் இல்லாமல் போகவில்லையே. டிஜிட்டல் இலகுவானது என்பதை மறுப்பதற்கில்லை. எளிதில் எல்லாருக்கும் புத்தகத்தை கொடுத்து விடலாம். தபால் செலவு இல்லாமல் வாசிக்கக் கிடைக்கின்றது. இப்பொழுது "ரைம் சஞ்சிகை" தமது சஞ்சிகையை டிஜிட்டல் வடிவத்துக்குக் கொண்டுபோய் விட்டார்கள். நீங்கள் சந்தா கட்டினால் அதற்குரிய லைசன்ஸ் உங்களுக்கு*

அனுப்பப்படும். நூலுருவிலும் தேவைப்பட்டால் பெறலாம். என்சைக்கிளோபீடியா பிரிட்டானிக்காவும் அப்படித் தான் செய்கின்றது. ஆனால் அவர்கள் கூட அந்த கலைக்களஞ்சியத்தை அச்சிட்டு வைத்திருக்கிறார்கள். ஏனென்றால் சில வாசகருக்கு நூலை எடுத்து கையில் வைத்து வாசிக்கிற வசதி இந்த டிஜிட்டல் உலகத்தில் இல்லை. புத்தகமாக வாசிக்கும் பொழுது தேவையானதை வாசித்துவிட்டு அடையாளப்படுத்தி வைத்துவிட்டு பின்பு வாசிக்கலாம். அந்த சௌகரியம் உலகம் முழுவதும் புத்தகத்தில் தான் இருக்கிறதனால் தான் பதிப்பகங்கள் இன்றும் முழு மூச்சோடு இயங்குகின்றன. அதனால் நூலகங்கள் கட்டாயம் தேவை.கிராம நூலகங்கள் தனியே வாசிப்பதற்கு மட்டுமில்லை. கிராம நூலகத்தின் வேலை அந்தக் கிராமத்தின் வளங்களையும் கலாசாரத்தையும் பாதுகாத்தல் என்பதையும் நாம் புரிந்தகொள்ள வேண்டும்.

மேலும், சத்தியன் சொன்ன கருத்தொன்றுக்கும் நான் பதிலளிக்க வேண்டும். எமது பிரதேசங்களில் சனசமூக நிலையங்களே சமூகக் குழுக்களால் அவர்களுக்காக உருவாக்கப்பட்டது தான். சனசமூக நிலையத்தின் பெயரை வைத்தே இது குறிப்பிட்ட சமூகத்தினருக்குரிய தென்று எம் முன்னோர்கள் தெரிந்துகொள்வார்கள். தமிழகத்தில் சாதிய அடிப்படையில் உருவாக்கப்பட்ட அரசியல் கட்சிகள் போன்று, எமது மண்ணிலும் சாதிய அடிப்படையில் உருவாக்கப்பட்ட சனசமூக நிலையங்கள் வளர்ந்த காலமொன்றிருக்கிறது. இப்பொழுதும் அது இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படுகின்றதா என்ற கேள்வி எனக்குண்டு. சனசமூக நிலையங்களின் சம்மேளனம் இயங்கிய காலத்தில் இத்தகைய சாதிய வேறுபாடுகள் சம்மேளனத்தின் செயற்பாடுகளை பாதிக்கவில்லை. புத்தகங்கள் வேறுபாடுகளின்றி பகிர்ந்தளிக்கப்பட்டன. ஒரே கூரையின் கீழ் 35 சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள் அமர்ந்திருந்து என்னுடன் உரையாடிச் சென்றிருந்தார்கள். ஆனால் இந்த 21 ஆம் நூற்றாண்டிலேயும் இந்த ஏற்றத் தாழ்வுகள் மீண்டும் தலையெடுப்பதாகச் சொல்வதை என்னால் ஏற்க முடியவில்லை. கல்விச் செல்வம் அனைவருக்குமுரியது. ஒரு நூலகத்தில் அதற்கு நிச்சயமாக இடமில்லை.

திருமதி.கல்பனா சொன்ன கருத்தினை நானும் ஏற்றுக்கொள்கிறேன். ஏனென்றால் நூலகக் கட்டிடத்தை அதிக பொருட்செலவை ஒதுக்கிக் கட்டுவதற்கு முன்வரும் நாங்கள் அங்கு வைப்பதற்கு புத்தகங்களை பலரிடமும் அன்பளிப்பாகவே எதிர்பார்க்கும் நிலைமையை அவதானித்துள்ளேன். அந்த நூலகத்தை நிர்வகிக்க நல்ல தரமான நூலகரை நியாயமான சம்பளம் வழங்கி நியமிப்பதில் பின் நிற்கின்றோம். நீண்ட காலத்திட்டத்தில் நியாயமான சம்பளம் கொடுத்து ஒரு

நூலகரை நிரந்தரமாக நியமித்தால் தான் நூலக வேலைத்திட்டங்களை ஒழுங்காக எடுத்துச்செல்ல முடியும். குறைந்த வேதனத்தில் நியமிக்கப்படும் நூலக உதவியாளர்கள் பொருளாதார காரணிகளால் விரைவில் அந்த நிறுவனத்திலிருந்து நீங்கிச் சென்று விடுவார். புதிதாக வருபவர், முன்னையவரின் வழியொற்றி வேலைகளை தொடர முடியாமல் போகலாம். குறைந்தபட்சம் ஐந்தாண்டுகள் தொடர்ச்சியாக ஒரே நூலகரின் கீழ் இயங்கும் நூலகங்களின் வளர்ச்சி துலக்கமாகத் தெரியவரும்.

தன்னார்வலர்களை மட்டும் வைத்து நாம் எதையும் நீண்ட காலம் செய்ய முடியாது. கிராம நூலகத்தில் அந்தப் பிரச்சினை வராது. அங்கு எல்லாரும் தன்னார்வலர்கள் தானே. அங்கு சம்பளம் என்பதற்கு இடமில்லை. ஆனால் உளத் தூய்மையோடு சில விடயங்களை சேகரித்து அதுசார்ந்த அந்த நூலகத்தோடு வேலை செய்து, வேலைத் திட்டத்தைச் முன்னெடுக்க வேண்டும்.

நன்றி

திரு.வசீகரன்
(செயற்பாட்டாளர், பசுமைச் சுவடுகள்)

முக்கிய கருத்தொன்றை நான் சொல்ல வேண்டுமென விரும்புகின்றேன். நூலகம் என்ற கருத்தாக்கத்தில் இருக்கிற நடைமுறைகள் பற்றி சொல்ல வேண்டுமென்று யோசிக்கிறேன். நான் பசுமைச் சுவடுகள் என்ற அமைப்பிலே செயற்பாட்டாளாராக இருக்கிறேன். நாங்களும் நூலகம் தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றோம். ஏற்றத் தாழ்வுப் பிரச்சினைகள் இருக்கிறதென சத்தியதேவனும் ஏற்கனவே சொல்லியிருந்தார். திரு.செல்வராஜா அவர்களே, நீங்கள் வியப்பாகச் சொல்லியிருந்தீர்கள், 21ஆம் நூற்றாண்டிலும் அவ்வாறானதொரு பிரச்சினை இருக்கின்றதா என்று. உண்மைதான். எங்கள் அனுபவத்தில் இலங்கையில் யாழ்ப்பாணத்தில் நிலைமை அப்பிடியிருக்கிறது. வெள்ளாள சமூகத்தைச் சேர்ந்த ஒரு சனசமூக நிலையத்தில் நாங்கள் கொஞ்ச புத்தகங்களை கொடுத்து, ஒரு நூலகத்தை உருவாக்க முயன்றோம். தோழமை அமைப்பாக விதை குழுமம் இருந்தது. இணைந்து வேலை செய்து கொண்டிருந்தோம். பக்கத்திலேயே ஒரு கிலோமீட்டரில் நளவர் சமூகம் இருக்கிறார்கள். என்ன பிரச்சினை யென்றால் எங்களால் இரண்டு கிராமத்தையும் இணைத்து ஒன்றாக வேலை செய்ய முடியவில்லை. நளவர் சமூகத்தவர் வாழ்ந்த பிரதேசத்திலே

ஒரு நூலகம் இருக்கிறது. நளவர் சமூகத்தைச் சேர்ந்த பிள்ளைகள் வெள்ளாள சமூகத்தைச் சேர்ந்த நூலகம் இருக்கும் இடத்திற்கு, அல்லது பொது நூலகத்திற்கு வருவார்கள். ஆனால் எம்மால் நளவர் சமூகம் இருக்கிற இடத்திற்கு வெள்ளாள சமூகத்தைச் சேர்ந்த பிள்ளைகளைக் கூட்டிச் சென்று வேலை செய்யமுடியாமல் இருந்தது. அதில் ஒரு ஏற்ற தாழ்வு இன்றும் காணப்படுகின்றது. வெள்ளாளர் ஏன் எங்களின் இடத்திற்கு வர மறுக்கின்றார்கள்? ஏன் எங்களின் இடத்தில் அவர்களால் ஒரு நிகழ்ச்சி செய்ய முடியாமல் இருக்கிறது என்ற பிரச்சினை தாழ்த்தப் பட்ட சமூகங்களிற்கு இருக்கின்றது. அதனால் விதை குழுமம் விளாங்காடு என்கின்ற அந்த கிராமத்தில் ஒரு சிறுவர் நூலகமொன்றை உருவாக்கி செயற்பாடுகளைச் செய்துகொண்டு இருக்கின்றார்கள். இப் பொழுது கிராமிய நூலகம் என்ற செயற்பாட்டில் நிறைய அமைப்புகள் வேலை செய்கின்றார்கள். அவர்களும் வேறுவேறு பிரச்சினைகளைப் போல சாதியப் பிரச்சினையும் இருக்கிறது என்ற அந்தப் பிரக்ஞையோடு வேலை செய்தால் நன்று என நினைக்கிறன்.

*நன்றி*

## திரு. குலசிங்கம் வசீகரன்

(எங்கட புத்தகங்கள்)

வணக்கம், பசுமைச் சுவடுகள் சார்ந்து பேசின வசிகரன் அவர்கள் சொன்னது போலான சூழலை நானும் எதிர்நோக்கியிருக்கிறேன். இங்கு அந்த மாதிரியான சூழல், 21ஆம் நூற்றாண்டிலும் இருக்கின்றது. ஆனால் அதுக்கு திரு. செல்வராஜா அவர்கள் முன்மொழிந்தது மாதிரி நாங்கள் அந்தந்தப் பகுதிகளிலேயே தனித்தனியாக சிறு நூலகங்களை வாசக சாலைகளை உருவாக்குவதனூடாகத்தான் கொண்டு செல்லக் கூடியதாக இருக்கும். தனியார் வகுப்புகளிற்கு செல்ல முடியாத அல்லது பாடசாலைகளுக்கு மட்டும் செல்லக்கூடிய பொருளாதார சூழலில் இருக்கின்ற பிள்ளைகளுக்கான வகுப்புகளை நாங்கள் ஒழுங்கு செய்யும்பொழுது ஒரு குறிப்பிட்ட பிரதேசத்துக்கு மட்டும் அல்லது சமூகத்துக்கு மட்டும் அது பயன்பட்டதாய் இருந்தது. அப்போது நாங்கள் என்ன செய்தோம் என்றால் அதை வெவ்வேறு இடங்களில் இரண்டு வகுப்புகளாய் நடத்தினோம். அப்படி நடத்தும்போது சுமூகமாக நடந்து கொண்டிருந்தது. இரண்டையும் சேர்ப்பதற்கு முயலும்போது கொஞ்சம் சிக்கலாகத் தானிருந்தது.

அருண்மொழிவர்மன்
ஆசிரியர் குழு-புதிய சொல்,
செயற்பாட்டாளர்-விதை குழுமம்.

எங்கட புத்தகங்கள் வசீகரன் அண்ணாவும், பசுமைச் சுவடுகள் வசீகரனும் கூறிய கருத்துகளின் தொடர்ச்சியாக நானும் ஒரு கருத்தை தெரிவிக்க வேண்டும். திரு செல்வராஜா அவர்கள் விபரிக்கும் கிராம நூலகங்கள் போல அல்லாமல் கிராமங்களில் இருக்கக்கூடிய நூலகங்கள்- நாங்கள் அமைத்த நூலகங்களில் இருக்கக்கூடிய சவால்கள் என்னவென்றால், கிராமத்தில் இருக்கிற கட்டமைப்புகள் ஒடுக்கு முறைகளுக்கு எதிரான விடயம் வந்து, உண்மையாகவே இங்கு இருக்கிற பிள்ளைகளுக்கு சமத்துவம் இல்லாமல் இருக்கின்றது. அதற்கு எதிராகக் குரலெழுப்ப வேண்டும் என்ற விடயம் இலக்கியங்களிலே வந்திருக்கிறது. தத்துவங்களாகவும் கோட்பாடுகளாகவும் இல்லாமல் எளிமையான முறையில் கதைகளுக்குள்ளால் வந்திருக்கிறது. உதாரணமாக சின்ன வயதில் நான் வாசித்த தண்ணீர், சொந்தக்காரன், காட்டாறு, குடிமைகள் இது போன்ற நாவல்களையெல்லாம் சின்ன வயசில் வாசிக்கும்போது, அது இப்பிடியெல்லாம் பிழை நடக்குதே என்கிற மாதிரி எண்ணம் எனக்கொரு பத்துப் பதினோரு வயதில் இருந்தது. ஆனால் தத்துவங்களாகவும் சமூகப் பிரிவினைகளாகவும் நான் பார்த்ததென்பதை விட அந்த நேரத்தில் வந்த படங்களோடும் சேர்ந்து பார்க்கும்போது இப்பிடி ஆட்கள் பிழையாக வழிநடத்தப் படுகின்றார்கள், இதுக்கெதிராக வாற ஆள் ஒரு நாயகத்துவத்தோட வாறார். இந்த இடத்தில நூலகத்திற் குள்ளே ஆட்கள் வரும்போது இப்படியான இலக்கியங்கள் இன்னும் நூலகங்களில இருக்கிறதா என்று நாங்கள் பார்க்க வேண்டும். பொதுவாக முற்போக்கு இலக்கிய குழுக்களிலிருந்து வந்தவர்கள், இடதுசாரிகள் எழுதிய புத்தகங்கள் இளம் வாசகர்களுக்கு பயன்படுத்த கிடைப்பது குறைவு. ஏனென்றால் ஒன்று வரும்போதே நவீன இலக்கியம் என்று சொல்லி அதன் சிக்கல்கள் என்று வருகின்றார்கள், அல்லது கோட்பாடுகளை அறிய அவர்களால் முடிகிறது. பெரியார், அம்பேத்கார் அல்லது இடதுசாரி கருத்துக்கள் கோட்பாடுகளாக அவர்களுக்கு கிடைக்கிறது. முற்போக்கு இலக்கியம் தங்களை இணைத்துப் பார்ப்பதற்கான, ஊர்களுடன் சேர்த்து விளங்கிக்கொள்ள உதவுகிறது. உதாரணத்திற்கு தண்ணீர் நாவலில், ஊரில் தண்ணீர் அள்ளுவதில் ஒரு அரசியல் இருக்கின்றதென்று கொண்டு வருவது போன்ற கதைகள் இப்போது இருக்கிற சின்னப் பிள்ளைகளுக்கு கிடைக்கிறதா என்று பார்ப்பது முக்கியமான விடயம்.

கிராம நூலகங்களிற்குப் புத்தகங்களை சேகரிக்கும்போது அந்த நூலகங்களில் என்ன புத்தகங்கள் இருக்க வேண்டும் என்ற விடயம் திரு.செல்வராஜா அவர்களின் புத்தகமொன்றில் சொல்லப்பட்டிருக்கிறது. எங்களுடைய நம்பிக்கைகள், எங்களுடைய கொள்கைகள் என்கிற விசயத்தைவிட அங்கிருக்கக்கூடிய வெகுசன வாசிப்பிற்குரிய பரந்துபட்ட புத்தகங்கள் தான் இருக்க வேண்டும் என்று. அப்படி வாசிக்கக் கூடிய கிராமத்து வாழ்க்கையுடன் இணைத்து பார்க்கக் கூடிய புத்தகங்கள் பெரிய விடயமாக இருக்கும். எனக்கு ஞாபகமிருக்கு என்னவென்றால் "தமிலன்" என்ற இந்திய எழுத்தாளர் எழுதிய புத்தகமொன்று, பெயர் மறந்திட்டுது. அந்தப் புத்தகத்தை வாசித்தபோது தான் சின்ன கிராமத்தில இருந்து ஒருவர் வந்து ஆக்களையெல்லாம் ஒன்று திரட்டி சின்ன முதலாளி ஒருவருக்கெதிராக போராடுகின்ற மாதிரி பார்த்தேன். அப்போது இந்த மாதிரி குழந்தைகளாக இருந்து வளர்ந்தவர்களுக்கான வாசிப்பிற்கு வரும் போது இடையில் கிடைக்க வேண்டிய புத்தகங்களுக்கான வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. அந்த இடத்தில நாங்கள் நூலகங்களிற்குப் புத்தகங்களைக் கொண்டுபோய் சேர்க்கும்போது கணிசமான கவனத்தை இதில் செலுத்த வேண்டும். இலங்கைச் சூழலிலே கணேசலிங்கன் போன்றவர்களின் புத்தகங்களாய் இருக்கலாம். அந்தப் புத்தகங்களில் இருக்கிற இலக்கிய அழகியல் பற்றி கருத்திருக்கிறது. அதை பிறகு உரையாடலாம். ஆனால் நாங்கள் சொல்வோமல்லவா சமூகக் கோபம் என்று அதை ஏற்படுத்தக் கூடிய புத்தகங்கள் கிடைப்பதற்கான வாய்ப்பை கட்டாயம் குழந்தைகளுக்கு கொண்டு செல்வது பொறுப்பான நடவடிக்கையாய் இருக்குமென்று நினைக்கிறன்.

## திரு.என்.செல்வராஜா

பொது நூலகங்களைப் பொறுத்தவரையில் நான் அறிய, நாற்பது வருடங்களாக பல்வேறு நூலகங்களோடு செயற்பட்டுக் கொண்டிருக்கிறேன். பொது நூலகங்களில் சாதியப் பிரச்சினை மேலெழும்பவில்லை. மேலெழுவதுமில்லை. மற்றது சனசமூக நிலைய உத்தியோகத்தர்களின் பதவி நிலையைப் பற்றிக் குறிப்பிடப்பட்டது. இன்றைய பொழுதில் நாங்கள் உரையாடிக் கொண்டிருக்கிற வேலைத் திட்டம் அவர்களுக்கான வேலைத் திட்டம் என்றால் மிகையாகாது. ஒரு உதாரணம் சொல்லுகிறேன், யாழ்ப்பாண மாவட்டத்தில் நூறு பாடசாலைகளுக்கான நூலகர்களை அரசாங்கம் நியமித்தது. கல்வித்

*திணைக்களத்தால் ஒவ்வொரு பாடசாலைக்கும் நேர்காணல் செய்து சம்பளத்தோடு, நன்றாக படித்த, நூலகவியல் கற்ற ஆட்களை நியமித்தார்கள். என்ன நடந்ததென்றால், அதில் இரண்டே இரண்டு பேர் தான் இன்றுவரை பாடசாலை நூலகர்களாக இருக்கிறார்கள். மிகுதி 98 பேரும் நியமனம் பெற்ற கையோடு காலக்கிரமத்தில் ஆசிரியர்களாக மாறிவிட்டார்கள். இது தான் எங்களின் சாபக்கேடு. இன்றுள்ள சிக்கலே இதுதான், சனசமூக நிலைய உத்தியோகத்தர்கள், பிரதேச சபை உத்தியோகத்தர்கள் என்று நிறைய பதவி நிலைகள் சனசமூக நிலையங்களோடு இணைந்து வேலை செய்ய இருக்கின்றன. அவர்கள் எல்லாம் ஒழுங்காக இந்த நூலக சிந்தனையோடு இருப்பார்கள் எண்றால், எங்களுக்கும் எங்கள் பணிகள் இலகுவாய் இருக்கும். கிராம நூலகங்களை உருவாக்கிற உங்களுக்கும் இலகுவாய் இருக்கும். உங்களால் முடிந்தால் உங்கள் பிரதேசத்தில் இருக்கிற சனசமூக நிலைய உத்தியோகத்தரை ஒருமுறை உங்களின் கிராமத்திற்கு கூட்டிச்சென்று உண்மைகளையும், தேவைகளையும் கதைத்துப் பாருங்கள். வேண்டு மென்றால் மற்றுமொரு சந்திப்பில் மீண்டும் எமது அனுபவங்களை பகிர்ந்துகொள்ளலாம்.*

*சாதிய பிரச்சினை என்பது சாதாரண ஒரு பிரச்சியினையில்லை. நானும் நீங்களும் கதைச்சு முடிக்கிற பிரச்சினையில்லை. இது எங்களுக்குள் வேரோடி இருக்கிற பிரச்சினை. நான் நினைக்கைவில்லை என்னுடைய வாழ்நாளுக்குள் எல்லோரும் சரிநிகர் சமானமாக இருக்கிற நிலைமை வரும் என்று. அது இந்தியாவிலும் நடக்கவில்லை, இங்கும் நடைபெறவில்லை. ஆனால் அந்தப் பிரிவினைக்குள்ளால் ஒற்றுமையாக இருக்கிற வாய்ப்புகள் இருக்கின்றன. இரண்டு சாதிகளுக்கிடையில் இரண்டு சனசமூக நிலையங்கள் இருந்தால் அவர்கள் தங்கள் பாட்டுக்கு அபிவிருத்தி செய்துகொள்வார்கள். அவர்கள் இருவருக்கும் வேண்டிய வசதிகளை நாங்கள் பெற்றுக் கொடுப்போம். எங்களது நோக்கம் ஒன்றுதான். வாசிப்பை அனைவரிடையேயும் பாகுபாடின்றி ஊக்கவிப்பது. எங்களுக்கு இவர்கள் அதிகமாக வாசிக்க வேண்டும், அவர்கள் குறைய வாசிக்க வேண்டும் என்பதில்லை. என்னைப் பொறுத்த வரையில் வாசிப்பு, எழுத்து என்று இருக்கும்போது, நூலகம் என்ற சிந்தனையோடு நாங்கள் வேலை செய்யும்போது, இப்படியான பிரச்சினைகளை உள்வாங்கிக் கொண்டு நீங்கள் பக்கச் சார்பாக வேலை செய்தீர்கள் என்றால் கிராமத்தில் உங்களுக்குப் பிரச்சினை வரும் என்பது உறுதி. கோட்பாடு வேறு, நடைமுறை வேறு. ஆதனால் அதில் மிக எச்சரிக்கையா நீங்கள் இருக்க வேண்டும். எங்கள் நோக்கம் வாசிப்பு கலாசாரத்தை ஊக்குவிக்கிறது. பல சந்தர்ப்பங்களில் இந்த*

வாசிப்பு கலாசாரத்துக்குள்ளால் பதப்படுத்தப்பட்டு வெளியே வரும் எத்தனையோ பேர் பின்னாளில் சாதிய நிலைகளுக்குள்ளே இருந்து வெளியே வந்திருக்கிறார்கள். அவர்களின் கல்வி அறிவு, உயர் பதவி, துறைசார் புலமைத்துவம் என்பன சமூகத்தில் மதிக்கப்படும் பொது அங்கே சாதியம் மேலெழ வாய்ப்பில்லாது போய்விடுகின்றது. இன்று புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்பவர்கள் தம்மை ஊர்வழிச் சங்கங்களில் இணைத்துக் கொள்கிறார்களேயன்றி சாதிச் சங்கங்களை உருவாக்கி முட்டிமோதிக் கொள்வதைக் காணமுடியவில்லை. இந்த 21 ஆம் நூற்றாண்டு, கடந்துவந்த நூற்றாண்டைப் போல தண்ணீர் குடிக்க விடாமல் கிணத்துக்குள் நஞ்சு போடுகின்ற டானியலின் உண்மையான கதாபாத்திரமோ, அல்லது புங்குடுதீவில் மு.தளைய சிங்கத்தின் காலத்தில் நடந்த பிரச்சினைகள் போலவோ இப்போ இல்லை என்பதே எனது அவதானிப்பு. நூலக அபிவிருத்தி, வாசிப்புக் கலாச்சார அபிவிருத்தி என்பவற்றில் ஈடுபாடுகாட்டும் இளையோர்கள் சாதியப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண வேண்டும் என்று முனைந்தால் எமது மூல நோக்கம் சிலவேளையில் திசைமாறி வீரியம் குன்றிவிடும் வாய்ப்பும் ஏற்படலாம்.

இன்னொரு முக்கியமான விடயம். இதில நான் கட்டாயம் சொல்லியே ஆகவேண்டும். இதுவும் அருண்மொழிவர்மன் சொன்னதுதான். எங்கள் சமூகம் சார்ந்த இலக்கியப் படைப்புகளில் வளர்ந்த எழுத்துகள் இருக்கின்றன. நாவல்கள், சிறுகதைகள் என்பவற்றில் சமூகப் பிரச்சினைகளை வளர்ந்தோருக்குப் புரியும் வகையில் எழுதுகிறார்கள். ஆனால் சிறுவர் இலக்கியம் மாத்திரம் அப்படியே இருக்கின்றது. எட்டு வயது, பத்து வயதென்று பாப்பா பாடல்கள், நீதி நூல்கள் தான் திரும்பத் திரும்ப நூலுருவாக்கம் செய்யப்படுகின்றன. இடையில் வளரிளம் பருவத்தினருக்கென்று எதுவுமே இலக்கியமாகப் படைக்கப்படவில்லை. தாம் வாழும் சமூகத்தின் யதார்த்தத்தை அவர்களுக்கு விளக்கும் வகையில் சாதியம் மற்றும் சமூகச் சிக்கல்களை கருவாகக் கொண்டு புனைவுகள் எதுவும் தமிழில் வெளிவந்ததாகத் தகவல் இல்லை. சிறுவர் நிலையைக் கடந்தபின் பெரும் பாய்ச்சலாக வளர்ந்தோர் இலக்கியமே அவர்களுக்குக் கிடைக்கின்றது. வளர்ந்தோர் இலக்கியத்திற்கும் சிறுவர் இலக்கியத்துக்கும் இடையில் உள்ள வளரிளம் பருவத்தினருக்கான இலக்கியத்தை நாம் சிங்கள மொழிபெயர்ப்புகளிலிருந்தே கண்டடைய வேண்டியுள்ளது. இடையில் பெரிய இடைவெளி இருக்கிறது.

நான் அறிந்த வரையில் நவசோதியின் "ஓடிப்போனவன்" என்ற புத்தகம் 1968இல் வந்தது. அதன் பிறகு இப்போது சிங்கள இலக்கியங்கள்

*பல வளரிளம் பருவத்தினருக்கேற்ற நூல்களாக வெளிவந்துள்ளன. இத்தகைய இளையோர் இலக்கியங்கள் ரிஷான் ஷெரிப் போன்றவர்களால் தமிழ் மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இத்தகைய பல மொழிபெயர்ப்பு நாவல்கள் சந்தையில் இருக்கின்றன. ஆனால் தமிழ் எழுத்தாளர்களை பொறுத்த வரையில் இந்த வளரிளம் பருவத்தினருக்கான இலக்கியத்தை எம்மவர்களில் எவரும் எழுதினதாக எனக்குத் தெரியவில்லை. இன்று சிலபேர் அந்த உணர்வோடு எழுத முற்பட்டிருக்கிறார்கள். கவனித்திருக்கிறேன். ஆனால் இன்னும் அது வீறுடன் வெளிப்பட நீண்ட காலம் செல்லவேண்டும். வளர்ந்தோருக்கு எழுதுபவர்கள் வேறு, சிறியோருக்கு எழுதுபவர்கள் வேறு. அந்த இடைப்பட்ட வயதுக்குரியவர்களுக்காக எழுதுபவர்களை கவனமாக கவனித்து நாங்கள் ஊக்குவிக்க வேண்டும்.*

## *திரு.குலசிங்கம் வசீகரன்*

*13க்கும் 18இற்கும் இடைப்பட்ட அந்தப் பருவம் "வளரிளம் பருவம்" என்று அழைக்கப்படுகிறது. இது தொடர்பில் இரண்டு கட்டுரைகள் எங்கட புத்தகங்கள் சஞ்சிகையில் வெளிவந்துள்ளன. உண்மையில் அந்த வயதுக்குரியவர்களுக்கு, சாதிய பிரச்சினைகள் மட்டுமல்ல, பல்வேறுபட்ட சமூகப் பிரச்சினைகளையும் கொண்டு சென்று சேர்ப்பதற்கான கடப்பாடு, இலக்கியத் துறைக்கு இருக்கிறது. அதில் எழுத்தாளர்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி.*

## *திரு.அருண்மொழிவர்மன்*

*நான் ஒரு சின்ன விடயத்தை சொல்ல வேண்டுமென யோசித்தேன். இந்த வாசிப்பு, நூலகம், நூலக உருவாக்கம் என்கிற விடயத்தையெல்லாம் நாங்கள் செய்யும்பொழுது, அதாவது இதனால் வருகிற விழிப்புணர்வு, சமூகம் பற்றிய விழிப்புணர்வைத் தந்து, அது சமூக விடுதலைக்கு, சமத்துவத்திற்கு சமூக நீதியை நோக்கி ஆட்களைக் கொண்டு செல்வதற்கு உதவி செய்யும் என எங்களுக்கொரு நம்பிக்கை இருக்கிறது. வாசிப்பு, எழுத்து என்பதில் மட்டுமல்ல, நூலகங்கள் கூட ஒரு சமூக செயற்பாடு*

தான். ஆனால், நீங்கள் சொன்ன இடம் வேறாக இருக்கலாம், ஆனால் எனக்கு சாதியம் சம்பந்தமான பிரச்சினைகளை நாங்கள் எப்படி பார்க்கிறோமென்பது முக்கியமாகிறது. வாசிப்பையும் நூலகங்களின் வளர்ச்சியையும் பார்ப்பதற்காக அதை அப்படியே விடுவதென்பது எனக்கு கொஞ்சம் கஷ்டமாய் இருக்கிறது. ஏனென்றால் அப்பிடி விட இயலாது. அந்தப் பிரச்சினையை நாம் முன்வைத்து, அதை எப்படி இல்லாமல் ஆக்கலாம் என்பதற்கான வேலைகளை செய்து, அதுக்கான வேலைத் திட்டங்களைத்தான் உருவாக்க வேண்டும்.

வசிகரன் சொல்லிய அந்தப் பிள்ளைகளின் பிரச்சினையை நான் பார்த்திருக்கிறேன். அந்தப் பிள்ளைகளின் கதைகளைக் கேட்டிருக்கிறேன். நான் நேரடியாகப் போகாவிட்டாலும் கூட, வசியின் உரையில் சொன்ன சம்பவங்களையும், படிப்படியாக நடந்த விடயங்களையும் கேட்டிருக்கிறேன். அந்த நூலகம் என்ன நோக்கத்திற்காக உருவாக்கப் பட்டது என்றும், அது குடத்தனையில் விளாங்காட்டில் எப்படி உருவானதென்றும் தெரியும். அந்த நூலகத்தில் பிள்ளைகள் எவ்வளவுக்கு சந்தோஷமாகவும் சுதந்திரமாகவும் இருக்கிறார்கள் என்றும் தெரியும். அந்த வெளி அவர்களுக்கு தொடர்ந்தும் இருக்க வேண்டும். நாங்கள் நூலக வளர்ச்சிக்காக அந்த பிரச்சினைகளை பற்றி முன்வைக்காமல் இருக்கக் கூடாது.

உண்மையில் குறிப்பிட்ட மற்றைய நூலகத்தில் ஒருவருக்கான உரிமை மறுக்கப்படுகிறது. அந்த இடத்தில் இயல்பாக இருக்க இயலவில்லை என ஒரு பிள்ளை கருதுவதென்பது ஒரு கஷ்டமான விடயம் என்றுதான் நான் யோசிக்கிறேன். அதனால்தான் நான் சொல்லுகிறேன் வாசிப்புக்கென எவ்வளவோ புத்தகங்கள் வந்தன, இனியில்லையென்ற அளவில் சிறந்த இலக்கிய பிரதிகள் இருக்க வேண்டும் என்பதை விட, சமூகத்தில் பிரச்சினைகள் உள்ளன, எல்லோரும் சமமாக நடத்தப்படவில்லை, அது பிழையென்று சொல்கிற சிறுவர் புத்தகங்களை சிறு பிள்ளைகளுக்கு சிறுவயதிலேயே அறிமுகப்படுத்துவதால் அந்தப் பிள்ளைகள் வளர்ந்து வரும்பொழுது மாற்றம் வரும் என்று நினைக்கிறேன். நான் முதலில் சொன்ன துமிலனின் புத்தகம் தொடர்பாக- இன்றும் அந்தப் புத்தகத்தை பற்றித் தேடிப்பார்க்கிறேன். ஆனால் அந்தப் புத்தகத்தைப் பற்றி ஒரு அறிமுகமும் இல்லை. அந்தப் புத்தகம் கிராமத்திலிருக்கின்ற சமத்துவம் இன்மையைப் பற்றியது.

ஆகவே தான் வாசிப்பு எழுத்து என்ற செயற்பாடுகளுக்கு ஊடாக இங்கு சமூகம் சமத்துவமாக இல்லை, மனிதர்கள் சமத்துவமாக நடத்தப்படவில்லை. ஒரு சமூகத்தில் ஒருவர்கூட சமத்துவமாக

*மதிக்கப்படாமல் இருந்தால் அந்த ஒட்டு மொத்த சமூகமும் சமத்துவமாய் இல்லையென்றுதான் நான் நினைக்கிறன். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது மட்டுமில்லை, ஒரு குடம் பாலில் ஒரு துளி விஷம் என்பது மாதிரித் தான் அது. அப்பிடித் தான் இதில் இருக்கின்றவர்களும் நினைப்பார்கள் என்று நினைக்கிறேன். சில வேளை நாங்கள் ஒரு விடயத்தை கதைக்கும்போது அதன் வெளிப்பாடு மாறிவிடும் ஆகவே இதைக் கட்டாயம் இங்கே பதிவு செய்ய விரும்பினேன். நன்றி.*

### திரு.வேல்நந்தன்

*நிறைவாக, சுருக்கமாக, நீங்கள் எப்படி இந்த சாதியம் பற்றிய விடயங்களை பார்த்துக் கொண்டிருக்கிறீர்களோ, அதுபோல கிராம நூலகங்களைப் பொறுத்தவரை, பால்நிலை சமத்துவம் சார்ந்து, பொது நூலகங்களிற்கு பெண்கள் வாசிப்பதற்கு வருவதில்லை என்பது மனித வள ரீதியாக மிக அதிகமாக இருக்கக் கூடிய பெண்களினுடைய வாசிப்பு மட்டம் என்பது கூட நாம் கருத்திலே கொள்கிற போது குறைவாகவே இருக்கிறது. பொது வெளிக்கு வந்து வாசித்தல், வாங்கில் இருந்து வாசித்தல் போன்ற சில சமூகத் தடைகள் இதற்கு துணை செய்கின்றன. தனிநபர்களாக அவர்கள் வாசிக்கிறார்கள் என்பதை நான் மறுக்கவில்லை. இருப்பினும் பெண்களை எவ்வாறு கிராமிய நூலக திட்டங்களிற்குள் உள்வாங்குவது? மாதர் சங்கங்கள் என்ற தனியாக சங்க அமைப்புகளை கிராம மட்டத்தில் பேணினாலும், நூலகங்களை நடத்துகின்ற சனசமூக நிலையங்கள், போன்ற அமைப்புகளின் நூலக நிர்வாகங்களிற்குள் கூட பெண்கள் இருப்பதில்லை. வாசிப்பு பண்பாட்டிற்குள்ளே பெண்களை உள்வாங்குவதற்கு, நாம் செய்ய வேண்டிய வேலைகளும், சாதியம் என்பதற்கு நிகராக நாங்கள் பார்க்க வேண்டிய மற்றொரு முக்கியவிடயம் என்பது என்னுடைய கருத்து.*

*அந்த வகையிலே நமது மண்ணிலே நூலகங்கள் பற்றிய மீள் எழுச்சிக்காக விதை குழுமம், சிறகுகள் அமையம், பசுமைச் சுவடுகள் போன்ற பல இளையோர்கள் முயன்று, அதை சிறுவர் நூலகங்களாக, பாடசாலை நூலகங்களாக உருவாக்கித் தருகின்றமை போன்ற புத்தகப் பண்பாட்டுச் செயற்பாடுகள் உண்மையில் வரவேற்கக் கூடியவை என்று கூறி எனது கருத்துக்களை நிறைவு செய்கிறேன்.*

*திரு.கிரிசாந்*
(விதை குழுமச் செயற்பாட்டாளர்)

*வேல்நந்தன் அவர்கள் முதலில் சொல்லிய கருத்துக்கும் இப்போது சொல்லிய கருத்துக்கும் பொதுவாக ஒரு சில விடயங்களை சொல்லுகிறேன். திரு.செல்வராஜா அவர்கள் சொல்லுகிற மாதிரி, சில விடயங்களை அனுபவ அடிப்படையில் பார்த்தால், அதிகமாக நூலகங்களுக்கு வருவது, பெண்கள்தான். ஆண்கள் வருவது குறைவு. அதிலும் வயதானவர்களே பேப்பர் வாசிக்க வருவார்கள். இருபது வயதுக்கு மேல் கல்யாணம் ஆகிய பெண்கள் அதிகம் கிராம நூலகங்களை பாவிக்கின்றார்கள். அவர்களுக்கான புத்தகங்கள் தான் அதிகளவு கொள்வனவு செய்யப்படுகிறது. புத்தகங்களுக்கான ஓடர், பயன்படுத்துகிற புத்தகங்கள் எண்டு பார்த்தீர்களானால் பெண்கள் தான் அதிகம். இது தொடர்பில் வேறு வேலைகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என நினைக்கிறேன். சத்தியதேவன் இதை பற்றி ஒரு கட்டுரை எழுதிக்கொண்டிருந்தார். அந்த தகவல்கள், உரையாடல்கள் நூலக உருவாக்கத்தில் பெண்களின் பங்களிப்பு எப்படி இருந்திருக்கிறது என்பது பற்றியது. நான் நம்பிக்கையாகவே சொல்லுகிறேன், எங்களுடையது மாதிரி ஆணாதிக்க சமூகத்தில் இனிவரும் காலத்தில் நூலகங்கள் சமூகமயப்படுத்தப்பட்டு எங்களின் பிள்ளைகளிடம் போகக்கூடிய அந்த திறவு புள்ளியில் இருப்பது பெண்கள்தான். பெண்கள் முடிவெடுத்தால் மட்டும்தான் இங்கே இருக்கின்ற நூலகங்களை வெற்றிகரமாக நடாத்த முடியும். அதற்கான முன்னெடுப்போடு பெண்கள் இருக்கிறார்கள். நாங்கள் பார்த்த வரையில் நூலகங்களில் பால்நிலை சமத்துவம் என்பதற்கான வெளி இருக்கின்றது. நூலகங்களில் ஆண்கள் பெண்கள் சமத்துவமாய் மதிக்கப்படுவதற்கும் இயங்குவதற்குமான வெளியுள்ளது.*

*முற்றும்*




Printed by Kumaran Press (Pvt) Ltd books@kumarangroup.net